

# ஞானச்சுடர்

**2010**

**ஆவணி**



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



தம்பொரு ளென்பதம் மக்கள் அவர்பொருள்
தந்தம் வினையான் வரும்

**பொருள் :** தமது பிள்ளைகளைத் தமது செல்வம் என்று மனிதர் கூறுவர் நற்குழந்தைகளைப் பெறுதலாகிய அச்செல்வம் அவரவர் செய்யும் நல்வினைகளால் வரும் (63)

அமிழ்தினு மாற்ற இனிதேதம் மக்கள்
சிறுகை யளாவிய கூழ்

**பொருள் :** தமது குழந்தைகளின் கையால் அளையப்பட்ட சோறு அமிர்தத்திலும் பார்க்க மிக இனிமையுடையதாகும். (64)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### திருத்தாண்டகம் - 6



ஔவிய மற்றதும் நீயே ஐந்தெழுத் தானதும் நீயே
நவ்வி யுடையதும் நீயே நானாய் நிற்பதும் நீயே
செவ்விய மனமெலாம் நீயே சிந்தையில் நிற்பதும் நீயே
திவ்விய மாவதும் நீயே சீடனுங் குருவும் நீயே 12

அன்பில்லேன்

அன்பில்லேன் பொறுமையில்லேன் அடியார்தம் உறவுமில்லேன்
என்புருகப் பாடுகில்லேன் என்னையுமோர் பொருட்படுத்தி
மண்ணுலகில் மானிடனாய் மறைந்துவந்து வழிகாட்டி
இன்னல்தவிர்த் தாண்டுகொண்டான் எழிலாரு மிலங்கையிலே 1

குணமில்லா மூர்க்கரொடுங் கூடியே திரிகின்ற
மணமில்லா முருக்கமலர் அனையேனை மகிழ்ந்துவந்து
தினையளவு போதினிலே சிவமாக்கி யாண்டுகொண்ட
இணையில்லா இறையவனை இலங்கைநகர் கண்டேனே 2

# ஞானச்சுடர்



வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

# ஞானச்சுடர்

## வெளியீடு - 2 சுடர் - 152

## உ010 ஆவணி பொருளடக்கம்



| | | |
|---|---|---|
| அகவை 1000... | வல்வைச் செல்வம் | 1 - 2 |
| ஆற்றங்கரையான்... | ம. சிவயோகசுந்தரம் | 3 - 6 |
| திருவிளக்கு வழிபாடு | செ. ஐடா | 7 - 8 |
| சிவபெருமான் தூது... | நா. நல்லதம்பி | 9 - 12 |
| நித்திய அன்னப்பணி | | 13 - 14 |
| திருவிளையாடல் | ஆறுமுகநாவலர் | 15 - 17 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 18 - 20 |
| படங்கள் தரும்... | - | 21 - 24 |
| தினம் தினம் ஆனந்தமே | ஜக்கி வாசுதேவ் | 25 - 26 |
| தர்மசங்கடம் | சோ. பரமநாதன் | 27 |
| கர்மமும் மறுபிறவியும் | கு.கோபிராஜ் | 28 - 30 |
| அறஞ் செய விரும்பு | இராசையா ஸ்ரீதரன் | 31 - 32 |
| தவமுனிவனின்... | சிவ. மகாலிங்கம் | 33 - 37 |
| சிறுவர் கதைகள் | - | 38 - 39 |
| சிவபுராணம் | சு. அருளம்பலவனார் | 40 - 42 |
| சேரமான் பெருமாள்... | வாரியார் சுவாமிகள் | 43 - 45 |
| திருவாவடுதுறை ஆதினம் | ச. லலீசன் | 46 - 48 |
| செய்திச் சிதறல்கள் | - | 49 |
| சந்நிதியான் | ந. அரியரெத்தினம் | 50 - 52 |
| தமிழகத்திருக்கோயில் | வல்வையூர் அப்பாண்ணா | 53 - 58 |




அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 3219590

Web Site : WWW. Sannithiyan.org

பதிவு இல. Q.D/46/NEWS/2010

அச்சகம் : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ




**வெளியீட்டுரை -**

ஆடி மாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை இளைப்பாறிய உப தபாலதிபர் செ. நடராசா அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது வெளியீட்டுரையில் ஞானச்சுடர் வெளிவரத் தொடங்கிய காலத்திலிருந்து மிகவும் ஆழமான கருத்துக்களையும், எளிமையான சொற்பிரயோகங்களையும் கொண்டு சிறப்பாக வெளிவருகின்ற ஓர் நூலாகும்.

ஆச்சிரமம் எனும் போது எல்லோரது மனக்கண் முன்னே வருவது அன்னதானப் பணியே ஆகும். "பசி வந்தால் பத்தும் பறக்கும்" என்ற வாக்கிற்கிணங்க அனைவருக்கும் உணவளித்து வயிற்றுப் பசியைப் போக்குவதோடு, ஞானச்சுடர் சஞ்சிகை ஊடாக அறிவுப் பசியைப் போக்கி மக்களிற்கு ஓர் வழிகாட்டியாக ஆச்சிரமம் திகழ்கின்றது என்று கூறி, எல்லோருக்கும் சந்நிதி வேலவனின் அருள் கிடைக்கவேண்டும் என்று கூறி தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

**மதிப்பீட்டுரை-**

151ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையை சிவசண்முகவடிவேல் அவர்கள் நிகழ்த்தினார்கள். முதலில் சந்நிதி வேலவனின் அருளாசியோடு வெளிவரும் ஞானச்சுடரை மதிப்பீடு செய்வதென்பது இயலாத காரியமாகும். இந்நூலில் இடம்பெறும் கட்டுரைகள் யாவும் அனைவருக்கும் பயன்பெறும் ஓர் அறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றது.

இந்நூலானது கிரமம் தவறாது வெளிவருகின்ற ஓர் சஞ்சிகையாகும். மேலும் இந்நூலானது பிரகாசித்துக் கொண்டு செல்லவேண்டும் என்று கூறி தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார்.



சைவ சமயத்தின் ஐந்தாம் குரவராக எம்மிடையே தோன்றிய ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் இந்துக்களின் சீர்த்திருத்தவாதி என அறிஞர்களால் போற்றப்பட்டும்,

*நல்லை நகர் ஆறுமுகநாவலர் தோன்றிலரேல்*
*சொல்லு தமிழெங்கே சுருதி எங்கே*

எனவும் பலவாறு புகழ்ந்துரைக்கப்பட்டவர். சைவத்தையும், தமிழையும் வளர்ப்பதற்கு அரும்பெரும் தொண்டாற்றிய நாவலர் பெருமான் மதமாற்றத்தைக் கண்டித்து பலவிதமான கண்டன ஊர் வலங்களையும் நடாத்தி பல வித இன்னல்களைச் சந்தித்து தனது கோட்பாட்டில் உறுதியாக இருந்த செயல் வீரர்.

அவர் வாழ்ந்த காலத்தில் சைவ மக்களின் அஞ்ஞானத்தைப் போக்கி மெய்ஞானத்தைப் புகுத்துவதற்காக தாமே ஒரு அச்சு இயந்திரசாலையை அமைத்து அதன் மூலம் பல நூல்களை வெளியிட்டு சமயத்தை வளர்ப்பதற்கு பெரும் தொண்டு ஆற்றியவர். நமது மக்கள் சமயநெறியில் நின்று ஒழுகு வதற்கமைவாக சைவ வினாவிடை எனும் நூலின் மூலம் பலவித ஒழுக்க விதிகளை அமைத்து அதனை நடைமுறைப்படுத்தி வெற்றியும் கண்ட செயல்வீரர். இவரது காலத்தில்தான் வீட்டுக்கு வீடு பிடி அரிசி சேமிக்கும் பழக்கத்தின் மூலம் கஞ்சித் தொட்டி அமைத்து ஏழை மக்களின் பசிப் பிணி போக்குவதற்கு வழி சமைத்த வள்ளல்.




இவ்வாறு சமய சமூகப் பணிகளைச் செய்த இவரை நாம் என்றும் போற்றுதற்குரியதொன்றாகும். அத்தோடு ஆறுமுக நாவலர் சிலையினை மீளவும் நாவலர் மணி மண்டபத்தில் பிரதிஷ்டை செய்தமையை இட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு, அதனை அமைப்பதற்கு பெரும் பங்காற்றிய அனைவரும் போற்றுதற்குரியவர்கள்.

# செல்வச் சந்நிதிச் சிவகுமாரா...!



செல்வச்சந் நிதியில் வாழும்
செல்வனே சிவகு மாரா
சொல்லரும் அருள்பொ ழியும்
சுந்தரா சுவாமி நாதா
எல்லையில் லாத வுந்தன்
இரும்பெரும் ஆடல் பாட
நல்லருள் தருவா யென்றே
நாடினேன் நலஞ்செய் வாயே

பாட்டிது பொருளி தென்றும்
பயனுற விரித்துக் கூறி
ஊட்டிடுங் கல்வி நல்கி
ஒழித்துள மிருந்து என்னை
ஆட்டிடும் பெரிய கள்வா
ஆறுமா முகத்தி னையா
வாட்டிடா வகை யின்றுபோல்
வாழ்ந்திட வைப்பா யென்றும்

இருப்பினு முன்னை யேத்தி
எம்பிரான் முருகா வென்பேன்
தரித்தியான் துயிலும் போதும்
சண்முகா முருகா வென்பேன்
பொருப்பனே செல்வச் சந்நிதி
புனிதமா மயில்வா கனனே
திருப்புகழ் என்றும் பாடிச்
செப்பிட அருளு வாயே

ஒன்றல்ல பத்து நூறாய்
ஒருபகல் பாட வைத்தாய்
நன்றெனப் பன்னூல் உன்னை
நயந்துமே புகழ வைத்தாய்
குன்றெலாம் வள்ளி யோடு
குஞ்சரி சகிதம் நிற்பாய்
என்றுஞ்சந் நிதிபோ யென்றன்
இதயத்தே இருக்க வாராய்

வாய்மையே தூய்மை யாக
வாய்த்தஅன் பினர்பாற் செல்லும்
சேய். எனை மறந்தி டாதே
சிறியனேன் முதுமை யானேன்
காய்தலும் உவந்த லில்லாக்
கருணைசே ரன்பி னோடு
தேய்தலில் திங்கள் போலுன்
திருவடி தருவாய் எந்தாய்

என்றுமே யுன்பா லன்பு
இடையறா தருளு மாறும்
துன்புறு பிறவி வேரைத்
தொடர்ந்திடா தறுக்கு மாறும்
ஒன்றியே மறவா துன்னை
ஒளியுற அருளு மாறும்
நன்றுநீ அடியேனுக்கு
நயந்தருள் சந் நிதிநா தனே

காரியம் கைமேற் கூட
கந்தாவெம் மக்க ளெல்லாம்
வாரிபோல் வளம்பெ ருக்கி
வளர்த்திடும் அன்ன தானம்
மாரிபோல் காலந் தோறும்
மகிழச்செய் யாச்சி ரமம்
பாரிபோல் நடித்தச் செய்வாய்
பத்தரின் முத்து வேலோய்

கலாபூஷணம். முதுபெரும் புலவர்
ஆசிரியர் : வை.க. சிற்றம்பலவனார்

உ

# ஆவணி மாத சிறப்பும் பிரதி பெறுவோர் விபரம்

Dr. G. பவானி
(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

உரிமையாளர்
(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

Dr. திருமதி பத்மராணி குகானந்தன்
(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

S.S. றஜீந்திரன்
(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

சி. சிவமூர்த்தி
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

ஏ. அனுசாந்தன்
(ஆசிரியர், குப்பிளான்)

கி. மாலினி
(கலாச்சார உத்தியோகத்தர், கோப்பாய்)

A. நாகரெத்தினம்
(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

சி. குமாரசாமி J.P.
(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

வே. இராஜேந்திரா
(பொது சுகாதாரப் பரிசோதகர், ஆவரங்கால்)

பொ. குமாரசாமி
(சட்டத்தரணி, நவிண்டில்)

உரிமையாளர்
(அருளானந்தா புடவை மாளிகை, சங்கானை)

Dr. V. சச்சிதானந்தராஜா
(கண்ணா கிளினிக், சித்தங்கேணி)

திருமதி கௌரி சுரேசன்
(ஆசிரியர், ஆவரங்கால்)

S. அருளையா
(கொழும்பு)

M.P. தர்மலிங்கம்
(பத்திரிகை முகவர், உடுப்பிட்டி)

**செ. கந்தசாமி**
(வங்கியாளர், சண்டிலிப்பாய்)
**நா. சிவசிதம்பரம்**
(கோணாவளைலேன், கொக்குவில்)
**இ. அரிகரன்**
(ஈவினை, புன்னாலைக்கட்டுவன்)
**முகாமையாளர்**
(திருமகள் அழுத்தகம், தெல்லிப்பளை)
**திருமதி தமிழ்ச்செல்வி செந்தில்ராஜா**
(மிருசுவில்)
**ச. பத்மநாதன்**
(தெற்குத் தோப்பு, புத்தூர்)
**சி. சிவயோகநாதன்**
(விக்னேஸ்வரா வீதி, கரணவாய்)
**தே. தேவராஜேந்திரன்**
(திகிரி லேன், தும்பளை)
**பொ. நாகலிங்கம்**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)
**க. மயில்வாகனம்**
(விஜிதா வளவு, அல்வாய்)
**இ. நித்தனசுந்தரம்**
(ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)
**நா. தங்கராசா**
(வலவந்தோட்டம், கரணவாய்)
**இரத்தினம் சதீஸ்குமார்**
(மடத்தடி, குப்பிளான்)
**முத்து கணேஷ்**
(மஞ்சத்தடி, இணுவில்)
**K. கஜமுகன்**
(இராசவீதி, நீர்வேலி)
**செ. சிவலிங்கம்**
(மலர் வசந்தம், இணுவில்)
**N. ஜெயரட்ணராசா**
(பண்ணாகம், சுழிபுரம்)
**சி. சிவமோகன்**
(ஆனந்தகிரி, தாவடி)
**சி.து. கலைச்செல்வம்**
(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)
**S. கிருபாகரன்**
(உபதபால்கந்தோர், ஆனைக்கோட்டை)

**வ. ரவிச்சந்திரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**வே. பரமேஸ்வரன்**
(மாரக்காய், புலோலி தெற்கு)
**வை.ச. பரஞ்சோதி**
(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)
**ச. ஸ்ரீவிவேகானந்தராசா**
(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
**சீ.சி. கந்தையா (பலாலி)**
(ஆவரங்கால்)
**தி. கருணாகரன்**
(கரன் எலக்ரோனிக், கரணவாய்)
**ந. முத்துக்குமாரசாமி**
(சிறுப்பிட்டி தெற்கு)
**அதிபர்**
(ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை)
**பூ. நித்தியானந்தம்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**S. K. பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**
(மானிப்பாய் தெற்கு)
**இ. தயாபரன்**
(கோண்டாவில்)
**க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**S. சாம்பவி**
(யாழ்ப்பாணம்)
**S. கனகசுந்தரம்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**து. மனோகரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**அருணையா சுப்பிரமணியம்**
(நீர்வேலி மேற்கு)
**கி. சேந்தன்**
(குடமியன், பருத்தித்துறை வீதி, வரணி)
**த. புவனேந்திரன்**
(அந்திரானை, ஈவினை)
**ஆ. விநாயகமூர்த்தி**
(சாளம்பை, கரணவாய் மத்தி)
**சீ. வைகுந்தசாமி**
(திருத்தணி, வட அல்வாய்)

**சு. நவமணிநாதன்**
(புலோலி தெற்கு, புலோலி)
**ச. சிவகுமாரன் G.S.**
(அமுதசுரபி, கட்டுடை)
**K. நடராசா**
(பொறியியலாளர், பத்தமேனி)
**சி. நவரெத்தினம்**
(ஆனந்தா வீதி, மானிப்பாய்)
**S. சரவணபவன்**
(தோப்பு, அச்சுவேலி)
**ந. கனகநாயகம்**
(வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி)
**உரிமையாளர்**
(லக்ஷி தொலைத் தொடர்பகம், அச்சுவேலி)
**திருமதி ம. கமலக்கண்ணன்**
(கந்தப்பா வளவு, வல்வெட்டி)
**சி. சுப்பிரமணியம்**
(சமரபாகு, உடுப்பிட்டி)
**த. முகுந்தன்**
(மூளாய், சுழிபுரம்)
**வ. இளையதம்பி**
(முருகையன் கோவில் ஒழுங்கை, தும்பளை)
**சி. சுப்பிரமணியம்**
(பழைய பொலிஸ் நிலைய வீதி, சுண்ணாகம்)
**க. தேவதாஸ்**
(ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
**ந. பொன்னுத்துரை**
(தொம்பை வீதி, உடுவில்)
**ச. திவாகரன்**
(உரும்பராய் மேற்கு)
**க. சச்சிதானந்தன்**
(சந்தை வீதி, உடுப்பிட்டி)
**நா. கதிரமலைநாதன்**
(உரும்பராய் கிழக்கு)
**நா. மகேந்திரராசா**
(பிரேம மகால், வல்வெட்டி)
**ச. ஹரிஹரன்**
(கரணவாய் தெற்கு)
**இ. விக்னேஸ்வரன்**
(இணுவில் மேற்கு, இணுவில்)

உ

# அகவை 1000 காணும் தஞ்சைப் பெரிய கோயில்

- வல்லை செல்வம் அவர்கள் -

(08.08.2010 இரவு 9.15க்கு இடம்பெற்ற பி.பி.சி. தமிழோசை செய்தியில் ஒலி பரப்பாகிய தஞ்சைப் பெரிய கோயில் பற்றிய விவரணச் சித்திரத்தின் சுருக்கம் இது.)

2010ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்துடன் தஞ்சைப் பெரிய கோயிலதும், கோபுரத்தினதும் வயது 1000 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றது. மாமன்னன் ராஜ ராஜ சோழனால் கட்டப்பட்டு, தமிழக சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் தஞ்சைப் பெரிய கோயிலின் அமைப்பும் - அதன் கட்டுமானமும் இன்னமும் ஆய் வுக்குரியதாகவே உள்ளது. அதனாற்றான் ஐ.நா. தொல்லியல் பிரிவின் நேரடி கண்காணிப்பில், தத்தெடுக்கப்பட்டுள்ள மூன்று கோயில்களில் ஒன்றாக தஞ்சைக் கோபுரமும் கோயிலும் விளங்குகிறது. கோபுரத்தின் உச்சியில் வைக்கப்பட்டுள்ள 90 மெற்றிக்தொன் எடையுள்ள ஒரேகல் மேலே ஏற்றப்பட்ட விதம் குறித்து பல்வேறு கருத்துக்கள் இன்றும் நிலவுகின்றன. இருந்தாலும், கோபுரத்தின்



உட்பகுதியிலும் - வெளிப்பக்கம் நீண்ட தூரத்துக்கும் மண் நிரப்பி அதன்மேல் சாரம் கட்டியே இந்தக் கல் மேலே கொண்டுபோகப்பட்டிருக்க வேண்டும் என்பதே அநேகராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகும்.

இதன் காலத்திற்குப் பின்னர் தமிழ் நாட்டில் கட்டப்பட்ட கோபுரங்கள் அனைத்துமே இதன் தொழில்நுட்பம் - அமைப்பு -கட்டிட நிர்மாணம் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்டே கட்டப்பட்டவையாகும். தஞ்சைப் பெரிய கோயிலில் 1000 ஆண்டு நிறைவினைக் கொண்டாட தமிழக அரசு விரிவான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. தமிழக முதல்வர் தலைமையில், தொல்லியல் நிபுணர்கள், அற நிலையத்துறை சார்ந்த உயர் அதிகாரிகள், ஆய்வாளர்கள், அறிஞர்கள் என ஒரு குழுவும் நியமிக்கப்பட்டு, மேலதிக ஆய்வுப் பணிகளுக்காக 25 கோடி ரூபா நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விழாவின் முத்தாய்ப்பாக தஞ்சைப் பெரிய கோயில் கோபுர அமைப்பினை முகப் பாகக் கொண்ட தபாற்தலையும், நாணயக் குற்றியும் வெளியிடப்படவுள்ளன.

கருவறையின் உள்ளே பிரகதீஸ்வரர் அருகேயிருந்த மாமன்னன் ராஜராஜ சோழனின் வெண்கலச் சிலை வெகுகாலத்திற்கு முன்னரே அங்கிருந்து அகற்றப் பட்டுவிட்டது. (ஏன் அகற்றினார்கள் என்பது ஒருவருக்கும் புரியவில்லை) மிக அண் மைக் காலத்தில் மேற்படி ராஜராஜனின் வெண்கலச் சிலை குஜராத் மாநிலத்தின் பரோடா நகரில் தனியாருக்குச் சொந்தமான கவுரம் சாராபாய் அருங்காட்சியகத்தில் இருப்பது தெரியவந்தது. அதனை இந்த ஆயிரமாவது சிறப்பு ஆண்டில் தமிழக மக்களுக்கு அன்பளிப்பாகத் திருப்பித் தரும்படி தமிழ்நாடு அரசு, குஜராத் அரசைக் கேட்டுள்ளது. "இந்தச் சிலை, ராஜராஜ சோழனுடையதுதான்" என்பதைச் சந்தேக மற நிரூபிக்கும் ஆதாரங்களைச் சமர்ப்பிக்கும் பட்சத்தில் அச்சிலை தமிழக அரசிட மும் - மக்களிடமும் கையளிக்கப்படும் என குஜராத் அரசு சாதகமாக பதில் கூறியுள்ளது.

திருக்காளகஸ்தி கோபுரம் இடிந்து விழுந்த துயர சம்பவத்தின் பின்னர், பழைய கோபுரங்களின் "உறுதி" பற்றி உச்சக்கட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டன. தஞ்சைப் பெரியகோயில் கோபுரம் மீது மிக அண்மையில் மேற்கொள்ளப் பட்ட ஆய்வின் முடிவினை தொல்பொருள் துறை ஆய்வாளரும் அறிஞருமான திரு. P.S. ஸ்ரீராமன் இப்படிக் கூறுகிறார். "கோபுர அடித்தளம் 3 மி.மீ. மட்டுமே வித்தியாசப்படுகிறது. ஆயிரம் ஆண்டுகளின் கால ஓட்டத்தில் வேறு எவ்வித பாதிப்புகளும் கோபுரத்தில் ஏற்படவில்லை" என்பதாகும். தஞ்சைப் பெரிய கோயி லும் கோபுரமும் எப்படி மனித குலத்தை ஆச்சரியப்படுத்துகிறதோ, அதேபோன்று இந்த ஆய்வுப் பணியின் முடிவும் சமய ஆர்வலர்களுக்கும் ஆய்வாளர்களுக்கும் நிம்மதி தரக்கூடிய செய்தியாகும்.


**பி.கு.: 2009 - தை மாத ஞானச்சுடரில் தமிழகத் திருக்கோயில் வரிசைப் பகுதியில் "தஞ்சைப் பெரிய கோயிலும் - கங்கைகொண்ட சோழபுரமும்" பற்றி விரிவான ஒரு கட்டுரை வெளியாகியிருந்தமையும் இங்கு நோக்குதற்குரியது.**

# ஆற்றங்கரையான் அருள்பெற்ற வெளிநாட்டு துறவிகள்

- மயில்வாகனம் சிவயோகசுந்தரம் அவர்கள் -

ஈழநாட்டில் பல முருகன் ஆலயங்கள் அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றன. அவற்றுள் வடபால் நல்லூர் கந்தன், செல்வச்சந்நிதியான், மாவிட்டபுரம் கந்தன், பொலிகண்டி கந்தவனக் கடவை என்பன முக்கியமாக குறிப்பிடத்தக்கன. நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும், சந்நிதியில் அன்னதானக் கந்தனாகவும் மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும் திகழ்வதை யாவருமறிவர். தெற்கில் கதிர்காமத்தானாகவும் வடக்கில் சந்நிதியானாகவும் திகழும் முருகன் வாய்கட்டி மௌன பூசையையே தனக்குகந்தது என அருளியுள்ளான்.

நல்லூரானையும் ஆற்றங்கரையானையும் நாடி அருள்பெற்ற சித்தர்கள், யோகியர் பலராவார். யாழ்ப்பாணத்தில் 20ஆம் நூற்றாண்டில் ஒரு சித்தர் பரம்பரை நடமாடியது. கடையிற் சுவாமிகள், செல்லப்பதேசிகர், யோகர் சுவாமிகள், கைதடி மார்க்கண்டு சுவாமிகள் இவர்களில் சிலராவர். யோகர் சுவாமிகள் சாதி, சமய பேதமின்றி தம்மை நாடிய எல்லாச் சமயத்தினரையும் சாதியினரையும் வாழ்வாங்கு வாழ வழிகாட்டியவர். யோகர் சுவாமிகள் பௌத்தர்கள், கிறீஸ்தவர்கள், இஸ்லாமியர், வெளிநாட்டவர் என எல்லோருக்கும் அவரவருக்கேற்ற வழியில் அருள்பாலித்தவர்.



யோகர் சுவாமிகள் சந்நிதியான் மண்ணின் கீழ் சிவலிங்கங்கள் ஒளிர்கின்றன என்றும் அங்கே கால் வைக்க கூசும் எனவும் அம்மண்ணின் மேல் பக்தியுடன் மிதித்தால் தீராத வினையெல்லாம் பறந்தோடும் என தன்னை நாடி வரும் அடியவர்களுக்கு அடிக்கடி கூறுவார். சந்நிதியான் தீர்த்தம் இம்மைக்கும் மறுமைக்கும் ஏற்ற மருந்து எனவும் சில அடியார்களை அங்கு சில

நாட்கள் தங்குமாறும் சிலரை அங்கே கந்த சஷ்டி விரதத்தை பிடிக்குமாறும் வழிகாட்டி உள்ளார்.

ஆற்றங்கரையான் ஏழை எளியவர்களின் உண்கண்டதெய்வம். தன்னை நாடிவரும் அடியவர்க்கு அருள்புரிந்து எப்போதும் அவர்களது பசிப்பிணியைப் போக்குவான். அங்குள்ள ஆச்சிரமங்களில் இல்லையெனாது எப்போதும் அன்னதானம் நிகழும்.



மார்க்கண்டு சுவாமிகள்


வெளிநாட்டிலிருந்து வந்த சில துறவிகள் தமது ஆத்மீக பசியைப் போக்க ஆற்றங்கரையானை நாடினர். இவர்களில் கௌரிபாலா என்ற தீட்சாநாமம் பெற்ற ஜேர்மன் சுவாமிகள் சந்தசுவாமி என்ற பெயருடைய ரோல்பரிப் பிரபுவின் மகன் ராம்ஸ்போதம் பரி என்ற பெயருடைய நரிக்குட்டி சுவாமிகள் (அவுஸ்திரேலியாவை சேர்ந்தவர்) என்போர் குறிப்பிடத்தக்கவர்களாகும். இவர்கள் முதலில் கதிர்காமத்தில் உள்ள அப்பர்சுவாமி மடத்தில் தங்கி தமது ஆச்சிரம வாழ்வை ஆரம்பித்தனர். அங்குள்ள இராமகிருஷ்ண மடத்துறவிகள் இவர்களுக்கு போசனம் முதலியவற்றை வழங்கி ஆதரவளித்தனர். ஆனாலும் இவர்கள் மனம் ஆறுதலடையாமலிருந்தது. பின்னர் யோகர் சுவாமிகளைப் பற்றிக் கேள்வியுற்று அவரைச் சரணடைந்தனர்.



சந்த சுவாமிகள்

முதலாவதாக கௌரிபால எனும் ஜேர்மன் சுவாமிகள் 2ஆம் மகா யுத்தக் காலத்தில் ஜேர்மனியிலிருந்து இந்தியாவிற்கு கொண்டு வரப்பட்டு சிறைக் கைதியாக காவலிலிருந்த போது தப்பி இமாச்சலப் பிரதேசத்திற்கு சென்றார். அங்கு சாக்த உபாசனையில் ஈடுபட்ட பெரியாரால் கௌரிபால எனும் நாமம் சூட்டப்பட்டு இலங்கை வந்து மாத்தறையில் டொடன்டுவ புத்த பள்ளியில் தங்கியிருந்தார். பின்னர் கதிர்காமம் சென்று சில காலம் இருந்துவிட்டு ஒரு நாள் யாழ்ப்பாணம் வந்தார். ஸ்ரீ லங்கா புத்தக சாலையில் ஆத்மீகப் புத்தகங்களை ஒவ்வொன்றாக எடுத்துப் பார்த்துக் கொண்டிருக்கையில்

இவர் பின்னால் நின்ற தாடி வைத்த வயோதிபர் ஒருவர் இவரது புத்தகத்தை பறித்து "எட மடையா, புத்தகத்தில் ஒன்றுமில்லை, எல்லாம் போகப் போகத் தெரியவரும்" என்று கூறிவிட்டு போய்விட்டார். அப்போது இவருக்கு தன்னையறியாமலே ஒரு மனச் சாந்தி ஏற்பட்டதை உணர்ந்து அங்கு இருந்தவர்களிடம் யார் இந்தப் பெரியவர் என வினாவ அவர்கள் இவர்தான் கொழும்புத் துறை யோகர் சுவாமிகள்" எனக் கூறினர். மட்டற்ற மகிழ்ச்சியுடன் யோகர் சுவாமி களை அடிக்கடி தரிசித்தார்.


German Swami Gauribala Giri before Selvasannidhi Murugan Kovil Jaffna with associates Mr. Ganapathypillai (left) and Cinna Swami (centre). Photo September 1983 by Patrick Harrigan

ஒருமுறை யோகர் சுவாமிகள் பங்குனித் திங்களில் தனது சில பக்தர் களுடன் பண்டித்தலைச்சி அம்மன் கோவிலுக்குச் சென்றிருந்தார். இவர்களுள் கௌரி பாலா என்ற ஜேர்மன் சுவாமிகள் உட்பட எனது தந்தையார் மயில்வாகனம், லண்டன் வித்தியபவன் நாகராசா மற்றும் சரசாலை அன்பர்கள் யோகர் சுவாமிகள் முன்னிலையில் பொங்கலிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்போது ஜேர்மன் சுவாமிகள் யோகர் சுவாமிகளை நோக்கி "இது என்ன? அது என்ன?" என அங்கு நடந்த நிகழ்வுகளை வினாவிக் கொண்டிருந்தார். அப்பொழுது யோகர் சுவாமிகள் "கௌரிபாலா, சும்மா இரு" என அருளினார். அதன் பின் செல்வச் சந்நிதியில் ஆச்சிரமம் அமைத்த ஜேர்மன் சுவாமி சும்மா இருத்தலைப் பற்றி ஆராய்ந்து "சும்மா இருக்க ஒரு சூத்திரம்" எனும் நூலை தமிழில் எழுதினார். அதை நாவலப்பிட்டி ஆத்மஜோதி முத்தையா அவர்களைக் கொண்டு அச்சிடு வித்தார். ஆனால் 54 பிரதிகளே அச்சிடுமாறு கூறினார். அதைப்பற்றி ஆத்மஜோதி முத்தையா அவர்கள் வினாவ "இந்தத் தத்துவத்தை 54 பேரே விளங்குவர்" எனக் கூறினாராம். முதலாவது பிரதியை கைதடி மார்க்கண்டு சுவாமிகளுக்கு வழங்கி ஆசீர்வாதம் பெற்றார். இப்புத்தகத்தை மார்க்கண்டு சுவாமிகள் சமாதி அடைந்தபின் அவரது அலுமாரியில் யான் பார்வையிட நேர்ந்தது. அதிலே ஜேர்மன் சுவாமிகள் மார்க்கண்டு சுவாமி களுக்கு எழுதிய குறிப்பில் வாசிக்க நேர்ந்தது. ஜேர்மன் சுவாமிகள் சுமார் பதினைந்து தடவைக்கு மேல் சந்நிதியிலிருந்து கதிர்காமத்திற்கு பாதயாத்திரை செய்துள்ளார். திருவிழாக் காலத்தில் கதிர்காம சுவாமி ஊர்வலத்தின் போது யானை முன் நின்று ஆனந்த நடனமாடி முருக பஜனை செய்வார்.


German Swami Gauribala with Mayilvahanam Swami of Ananda Ashram, Selvasannidhi Murugan Kovil, Jaffna, in 1981.

இவரது குடிசை ஆனந்தாச்சிரமத்திற்கு அருகே அமைந்தது. இவருக்கு தேவையான உதவிகளை ஆனந்தாச்சிரம பொறுப்பாளர் மயில்வாகனம் சுவாமிகள் செய்து வந்தார்கள். சிலவேளைகளில் மயில்வாகன சுவாமிக்கும் தெரியாமல் வேறு மடங்களுக்குச் சென்று பக்தர்களுடன் சேர்ந்து பிட்சா பாத்திரம் ஏந்தி நிற்பார். சில வேளைகளில் யோகர் சுவாமிகள் போல தலைப்பாகை கட்டி வாயில் ஒரு சுருட்டும் வைத்துக் கொண்டுதிரிவார். கையில் "சும்மாஇரு" என பச்சை குத்தியுள்ளார். இவர் சமாதியாகும் வரை சந்நிதியிலேயே தங்கியிருந்தார்.

இவருடன் ஆரம்ப காலத்தில் கதிர்காமத்தில் இருந்த சோல்பரிப் பிரபுவின் மகன் சில காலம் சந்நிதியில் இவருடன் தங்கியிருந்தார். இவர்கள் அடிக்கடி கதிர் காம யாத்திரை செய்வார்கள்.

யோகர் சுவாமிகளின் குரு செல்லப்பா சுவாமிகள் "இரு யானைகளை ஒரு தறியில் கட்டக்கூடாது" என்று கூறுவார். அதுபோல ஒரு நாள் யோகர் சுவாமிகளைத் தரிசிக்கச் சென்ற சோல்பரிப் பிரபுவின் மகன் சந்தசுவாமிக்கு (அன்று ஒரு திருவா திரை நாள்) ஞானாபிஷேகம் செய்து புத்தாடை அணிவித்து "சந்தசுவாமி" என நாமம் சூட்டினார்.



அத்துடன் "உனக்கு நீயே எசமான். காண்டாமிருகம் போல் தனித் திரு" என உபதேசம் செய்து சிவ தொண்டன் நிலையத்தில் சில நாள் தங்க வைத்து பின்னர் அவ ரைக் கைதடி மார்க்கண்டு சுவாமி களிடம் ஒப்படைத்தார். மார்க்கண்டு சுவாமிகள் அவருக்கு நற்சிந்த னையை ஆதியோடந்தமாக உப தேசித்தார். 1984 வரை மார்க்கண்டு சுவாமிகளுடன் ஆச்சிரம வாழ்வு மேற்கொண்டார். சில காலம் செங்கலடி சிவதொண்டன் ஆச்சிரமப் பொறுப்பை ஏற்று மட்டக்களப்பில் விவசாயத்தை ஊக்குவித்தார். 1984ஆம் ஆண்டு இங்கிலாந்து சென்ற அவர் 2004 டிசம்பரில் குருபதம் எய்தினார். 2004 நவம்பரில் இங்கிலாந்து சென்ற அடியேனுக்கு அவரைத் தரிசிக்கும் பாக்கியம் கிடைத்தது.

பரி என்ற அவுஸ்திரேலியரும் இவர்களுடன் செல்வச் சந்நிதியில் தங்கி சாதனை புரிந்தவர். பின்னர் கரம்பனிலும் மலை நாட்டிலும் வாசம் செய்த இவர் இறுதியில் திருவண்ணாமலையில் குகை ஒன்றில் தங்கி தமது இறுதிக் காலங்களில் வாழ்ந்தார்.

ஆற்றங்கரையான் உற்சவ காலத்தில் இத்துறவிகள் வாழ்ந்த தவ வாழ்க் கையை நினைவு கூர்ந்து ஆற்றங்கரையான் சகல மக்களுக்கும் ஆறுதலான வாழ்வை வழங்கவேண்டி அவன் புகழ் பாடி வாழ்த்தி வணங்குவோமாக.

உ

# திருவிளக்கு வழிபாடு

- செ. ஜடா அவர்கள் -

கடவுள் ஒளிமயமானவர் என்பதே நமது வேதங்களில் காணப்படும் உண்மை. வேதநெறியில் வாழையடி வாழையெனத் தோன்றிய அருளாளர்களும் ஆண்டவனை அருள் ஒளி வடிவாகவே கண்டனர். 'அருட் ஜோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்' என்று வள்ளலாரும், 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ் ஜோதியே' என்று மாணிக்கவாசகரும், 'எரிகின்ற இள ஞாயிறன்ன மேனி', 'ஒளி வளர் விளக்கே' என்று வைகுண்ட சுவாமியும் இறைவனைப் பற்றி அருளியிருக்கும் அருள் மொழிகள் இந்த உண்மையை நமக்குத் தெளிவுபடுத்தும்.

நமது சாதாரண புலனறிவுக்கும் புலப்படாமல் அண்டங்களுக்கு அப்பால் அருட் பெருஞ் சுடராய் நின்று எங்கும் அருள் பாலிக்கும் தெய்வத்தின் திருவுருவ வழிபாடே திருவிளக்கு வழிபாடாகும்.



கடவுள் ஒளிவடிவினர் என்பதை நமக்கு நினைவூட்டுவதே திருக்கார்த்திகைத் திருநாள். இல்லக விளக்கான பெண்களுக்கே இவ்விழா முக்கியமானது. இதனைத் தையலர் கொண்டாடும் கார்த்திகைத் திருநாள் என்று ஞான சம்பந்தப்பெருமான் கூறியுள்ளார். ஆதலே திருவிளக்கு

வழிபாடு பெண்களுக்கு உரித்தான வழிபாடாகும்.

இருள் துன்பம் தருவது; ஒளி இன்பம் தருவது. ஒளி இன்றி உலகமேது? வாழ்க்கையேது? புற இருள் போக்குவது ஒளி; அக இருளைப் போக்குவது அருள் ஒளி உணர்வு; இருளாகிய துன்பம் நீங்கி அருளாகிய இன்பம் நிறைந்திட திருவிளக்கு வழிபாடு செய்கின்றோம். கேணி நீரை ஒரு பாத்திரத்தில் எடுத்து நாம் அருந்தி தாகம் தீர்த்துக் கொள்வது போன்று அருட் பெரும் ஜோதி தனிப்பெருங் கருணையாகிய தெய் வத்தின் திருவருளைத் திருவிளக்கில் ஏற்றி வழிபட்டு நாம் துன்பத்தை தீர்த்துக் கொள்கின்றோம்.

இதன் பயன்பாடுகளை நாம் கருத்திற்கொண்டால் திருவிளக்குப் பூசை செய்வ தால் நம் வாழ்வில் தூய்மையும், தெய்வத்தன்மையும் பெருகும். சஞ்சலமும், வறுமை யும் நீங்கி சாந்தியும் வளமும் நிறையும். தாய்மார்கள் தினந்தோறும் தங்கள் இல்லங் களில் அந்திமாலையில் ஆதவன் (சூரியன்) ஒளி மறைந்ததும் திருவிளக்கேற்றி மலர் கள் தூவி குடும்பத்தில் எல்லோரும் கூடி மண்டியிட்டு வழிபடவேண்டும். அஷ்டலெட் சுமிகளும் அங்கு குடிகொண்டு நமக்கு வேண்டிய எல்லா நன்மைகளையும் அருளு வார்கள். திருவிளக்கு வழிபாடு தினந்தோறும் நடைபெறும் இல்லங்களில் தெய்வ சாந்நித்யம் பெருகுவதால் பேய், பிசாசு, பில்லி, சூனியம் ஒன்றும் அங்கு அணுகாது.

ஆலயங்களில் பெண்கள் ஒன்று கூடி முறைப்படி ஆளுக்கொரு திருவிளக் கேற்றி வரிசையாக வைத்து வழிபடும் போது ஆன்மீக ஒருமைப்பாடும், அன்புணர்வும் வளரும். ஆலயங்களில் அருள் அலைகள் நிறைந்து ஆலயத்தின் உள்ளும், புற மும், அவ்வூரெங்கும் பரவி நிற்கும். அதனால் அவ்வூரில் தீய பிணிகளும், தீய சக்திகளும் விலகி அன்பும் அமைதியும், செல்வமும் சிறப்பும் வளரும்.

ஆகவே நம் வீட்டு நலமும், நாட்டு நலமும் வளர நம் இல்லங்களில் பொதுவாக ஆலயங்களில் ஒன்று கூடி சிறப்பாகவும், திருவிளக்கு வழிபாடு செய்ய முன்வரவேண்டும்.

இந்துக்களின் இல்லங்களில் பொதுவாக ஒவ்வொரு காரியத்திற்கும் ஒவ் வொரு அறை அமைந்திருப்பது போல இறைவழிபாடு செய்வதற்கும் தனி இடம் இருக்கும். வீட்டில் உள்ள பெண்கள் தினந்தோறும் அந்திமாலையில் திருவிளக்கு வழிபாடு செய்ய வேண்டும். திருமணங்களின் போது பெண்களுக்கு சீதனமாகக் கொடுக்கும் பொருட்களில் திருவிளக்கு முக்கியமானது. இந்த வழக்கம் பெண்கள் தினந்தோறும் இல்லங்களில் திருவிளக்கேற்றி வழிபடவேண்டும் என்ற நோக்கத் தையே அடிப்படையாகக் கொண்டது.

சுபம்

# சிவபெருமான் தூது சென்றமை

- நா. நல்லைநம்பி அவர்கள் -

பாரத காப்பியத்திலே, பாண்டவர்க்காக கிருஷ்ண பரமாத்மா நூற்றுவரிடம் தூதுபோன வரலாறு கூறப்பெற்றிருப்பது நாம் அறிந்ததே. இதனை இளங்கோவடிகள்,

"...நூற்றுவர் பால் நாற்றிசையும் போற்றப்
படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத் தூது
நடந்தானை ஏத்தாத நாவென்ன நாவே..."

என்று குறிப்பிடுகின்றார்.

அதுபோல, சிவபெருமான், தமது தொண்டர்களுக்காகத் தூதுபோன கதையைப் பெரியபுராணம் நமக்குத் தந்திருக்கிறது.

இங்கே, சிவபெருமான், சுந்தரமூர்த்தி நாயனாருக்காகவும், ஏயர் கோன் கலிக்காம நாயனாருக்காகவும் தூதுபோன கதையைக் கூறுவதே எமது நோக்கமாகும்.

திருக்கைலாசத்திலே, சிவபெருமானுடைய தொண்டர்களுள் ஒருவராயிருந்த ஆலாலசுந்தரர், அதே கூட்டத்துள் இருந்த அநிந்திதை கமலினி என்ற பெண்களைத் திருநந்தவனத்தில் அடிக்கடி சந்திப்பதனால், அவர்கள் மீது ஆசை கொண்டிருந்தார். அதனால் பூவுலகில் பிறக்கும்படியான சிவதண்டனை பெற்றார்.

இதனால் வருந்திய ஆலாலசுந்தரர் இறைவனை வணங்கி நின்றார். அப்பொழுது, இறைவன், பூமியில் சுபபோகங்களில் அழுந்தவிடாமல் அங்கே வந்து ஆட்கொள்வதாகக் கூறியருளினார்.

அவ்வண்ணம், திருவாரூரிலே ஆலாலசுந்தரர் அவதாரஞ்செய்து நம்பியாரூரர் என்னும் பெயரோடு வாழ்ந்து வந்தார். கமலினி, பரவையார் என்ற பெயரோடு திருவாரூரிலே பிறந்து வாழ்ந்தார். அநிந்திதை என்னும் பெண், திருவொற்றியூரில் சங்கிலியார் என்ற பெயரோடு வாழ்ந்து வந்தார்.

இது இவ்வாறிருக்க, நம்பியாரூரருக்குச் சடங்கவி சிவாச்சாரியாருடைய மகளைத் திருமணத்துக்கு நிச்சயித்தார்கள்.

திருமண தினத்தன்று நம்பியாரூரர் மணமகனாக இருக்கும் போது, முன்னர் அருளிச் செய்தவாறு சிவபெருமான் எழுந்தருளி அந்தணனாக வந்து நம்பியாரூரரைத் திருமணபந்தத்தில் இணையாதவாறு தடுத்தாட்கொண்டருளினார்.

நம்பியாரூரரை, மார்ச்சார சம்பந்தமாக இறைவன் ஆட்கொண்டார் என்று புராணம் கூறுகின்றது. அதாவது, பூனை தனது குட்டியைத் தானே கௌவிக் கொண்டு போவது போல, இறைவன் தனது அடியானைத் தானே வந்து ஆட்கொள்வதாகும். திருவாதவூரடிகளை மற்கட சம்பந்தமாக இறைவன் ஆட்கொண்டார். "இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" என்று குட்டியானது தாய்க்குரங்கைப் பலமாகப் பிடித்துக்கொள்ள தாய் கொண்டு போவது போல, இறைவனை வாதவூரர் பிடித்துக் கொள்ள இறைவன் ஏற்றுக்கொண்டருளினார்.

சிவபெருமான் தடுத்தாட்கொண்டருளிய பின், சுந்தரர் பல தலங்களுக்கும் சென்று தமிழோடிசை பாடல் பாடியிருக்கையில், பரவையாரும் சுந்தரரும் வன்மீக நாதர் ஆலயத்தில் பூர்வ புண்ணியப் பயனால் சந்திக்க நேர்ந்தது. மனதில் சஞ்சலப்பட்ட அவர்கள் இருவரிடமும் தூது போன இறைவன், வேறு அடியார்கள் மூலம் அவர்களைத் தம்பதிகளாக்கி அருள்செய்தார்.

பின்பு பல தலங்களுக்குச் சென்று தேவாரத் திருப்பதிகங்கள் பாடிக்கொண்டு திருவொற்றியூருக்குச் சென்றார் சுந்தரர். அங்கே சங்கிலியாரைக் காண நேர்ந்தது. தனது திருவிளையாடலைத் தொடர்ந்த இறைவன், "உம்மை நான் பிரியேன்" என்று சுந்தரரிடம் சபதம் பெற்றுக்கொண்டு திருமணத்துக்குச் சம்மதிக்கும்படி சங்கிலியாருக்குத் தூது சொல்லி, இருவரையும் இணைத்து வைத்தருளினார்.

பரவையாரை மறந்து சங்கிலியாருடன் பல நாட்கள் கழிந்த நிலையில் ஒரு நாள், "வன்மீக நாதரை இவ்வளவு நாள் மறந்திருந்துவிட்டேனே" என்று எண்ணினார்.

**பத்திமையும் அடிமையையும் கைவிடுவான் பாவியேன்**
**பொத்தின நோய் அது இதனைப்பொருளறிந்தேன் போய்த்தொழுவேன்**
**முத்தினை, மாமணிதன்னை, வயிரத்தை மூர்க்கனேன்**
**எத்தனைநாள் பிரிந்திருக்கேன் என் ஆரூர் இறைவனையே.**

என்று திருப்பதிகம் பாடினார்; சபதத்தை மறந்தார்; திருவொற்றியூரைவிட்டுப் புறப்பட்டார். அதனால் சங்கிலியாருக்குக் கொடுத்த சபதம் மீறப்பட்டது. சுந்தரரது இரு கண்களும் பார்வை இழந்தன!

தான் தவறிழைத்தமையால் இத் தண்டனை என்பது சுந்தரருக்கு நினைவு வந்தது. "அழுக்குமெய்கொடு உன் திருவடி அடைந்தேன்..." என்று தொடங்கித் திருவொற்றியூர் இறைவனைப் பாடித்துதித்தார். பலன் இல்லை. ஆயினும் சுந்தரர் தம் பயணத்தைத் தொடர்ந்தார். வழியில் வரும் தலங்களில் இறைவனைப் பாடிப் பிழைதனைப் பொறுத்தருள வேண்டினார். திருவெண்பாக்கத்தில் ஊன்று கோல் கிடைத்தது. திருவேகம்பத்தில் ஏகாம்பரநாதனைத் தொழுது வணங்க இடக்கண் பார்வை கிடைத்தது. இவ்வாறு திருவாரூரை அடைந்த சுந்தரமூர்த்தி

நாயனார். "மீளா அடிமை உமக்கே ஆளாய்...." என்று தொடங்கிப் பதிகம் பாடி வன்மீகநாதன் அருள்பெற்று வலக்கண் பார்வையையும் பெற்றார்.

சுந்தரர் வருகையை அறிந்த பரவையார், சங்கிலியாரைச் சுந்தரர் திருமணஞ் செய்த கதையைத் தெரிந்திருந்தவராகையால், சுந்தரரையும் அவரது அடியார் களையும் வரவேற்காமல் கோபத்துடன் இருந்தார். இந்தத் திருவிளையாட்டின் மூலகாரணனான இறைவனிடம் சென்று சுந்தரர் முறையிட்டார்.

## சிவபெருமான் தூதுசென்றமை: I

அப்பொழுது, பிரமா விஷ்ணுவும் தேடிக் காணாத எம்மிறைவன் அன்று அர்த்த சாமத்திலே சுந்தரர் முன் தோன்றியருளினார்.

"ஊரிலுள்ள பெரியவர்கள் சென்று கேட்டபொழுதும் பரவையார் தம்மை வரவேற்க மறுத்துவிட்டார்" என்று சுந்தரர் சிவபெருமானிடம் முறையிட்டார்.

சிவபெருமான், அடியார்க்கெளியராகி அந்தணக் கோலத்தில் பரவையாரிடம் சென்று, 'சுந்தரன் வருவான், அவனை ஏற்றுக்கொள்' என்று கேட்க, "திருவொற்றி யூரில் சங்கிலியாரை மணஞ்செய்தவருக்கு இங்கு என்ன வேண்டும்" என்று மறுத்து, "பெரியவரே! உமது மதிப்புக்கு இந்த வேலை பொருந்தாது; போய்விடும்" என்று கூறிவிட்டார்.

பாவம், அர்ச்சகர் உருவம் கொண்ட இறைவன் திரும்பி சுந்தரரிடம் வந்து பரவையார் நிலை பற்றிக் கூற, சுந்தரர், "இனி நான் இறப்பதே மேல்" என்று இறைவனை வணங்கி நின்றார்.

திருவிளையாடலைத் தொடங்கிய சிவபெருமான் அதனை முடித்து வைக்க வேண்டுமே! மறுபடியும் தேவர்களை அழைத்துக்கொண்டு பரவையாரிடம் தூது போனார் இறைவன்!

இப்பொழுது இறைவன் தனது கோலத்தைச் சிறிது வெளிப்படுத்தித் தேவர் களோடுஞ் சென்றதனால், பரவையாருக்குப் பயம் வந்துவிட்டது.

தனது தோழனுக்காக முதலில் அர்ச்சகராக வந்தவரும் ஈசனே எனத் துணிந்து, பரவையார், சிவபெருமானை விழுந்து வணங்கித் தனது தவறுக்கு வருத்தம் தெரி வித்தார்; சுந்தரர் வரவுக்கும் உடன்பட்டார்.

சிவபெருமான் சுந்தரரிடம் வந்தார். என்ன நிகழுமோ என்று கவலையோடு நின்ற சுந்தரருக்கு, "பரவையார் கொண்ட கோபத்தைத் தணிவித்தோம்; இனி நீ அங்கு போகலாம்" என அருளிச் செய்தார் இறைவன்.

சுந்தரர் சந்தோஷத்தோடு போனார்; பரவையார் அவரை அன்புடன் வர வேற்றார்.

## சிவபெருமான் தூதுசென்றமை II

இவ்வாறு, சுந்தரமூர்த்தி நாயனாருக்காகச் சிவபெருமான் தூதுசென்ற சம்பவத்தை திருப்பெருமங்கலத்திலிருந்த ஏயர்கோன் கலிக்காம நாயனார் கேள்வி யுற்று, அவ்வாறு, 'திருமாலொடு நான்முகனுந் தேடிக் காணமுடியாத சிவபெரு மானைத் தூதனுப்பிய சுந்தரரின் செய்கை காரணமாக அவர் மீது கோபங்கொண் டிருப்பதாகச் சுந்தரர் அறிந்து சிவபெருமானிடம் முறையிட்டார்.

தமது மெய்யடியார் இருவர் தமக்குள் முரண்பட்டிருப்பதை நீக்கியருளத் திருவுளங் கொண்ட சிவபெருமான், கலிக்காமருக்குச் சூலை நோய் உண்டாகத் திருவுளங்கொண்டார். பின்னர் கலிக்காமருக்குக் காட்சி கொடுத்து, "உனது நோயைச் சுந்தரனே நீக்க வல்லான்" என்று திருவாய் மலர்ந்தருளினார். அதுகேட்ட கலிக்காமர், "சுந்தரர் வருவதை விரும்பேன்; நோய் தீராவிட்டால் இறந்துபடுவேன்" என்று பிடிவாதமாக இருந்தார்.

அதனால் சிவபெருமான் சுந்தரரிடம் தூது போனார். கலிக்காம நாயனாரின் பிடிவாத குணங்கூறி, திருப்பெருமங்கலப் பதிக்குச் சென்று அவரது நோய் நீங்க உதவும்படி திருவாய் மலர்ந்தருளினார்.

சுந்தரர் தமது ஊருக்கு வருவதை அறிந்த கலிக்காம நாயனார் தமது உடை வாளினால் தம்மைத்தாமே வெட்டிக்கொண்டு உயிர் நீத்தார்.

சுந்தரர் கலிக்காமரின் இல்லத்துக்கு வந்து சேர்ந்தபொழுது கலிக்காமர் இரத்த வெள்ளத்தில் இறந்து கிடந்தார்.

இவருடைய உயிரைக் காப்பாற்ற முடியவில்லையே எனக் கலங்கித் தாமும் அவ்வாறு உயிரைவிட உடைவாளை எடுத்தார் சுந்தரர்.

அப்பொழுது கருணாநிதியான சிவபெருமான், கலிக்காம நாயனார் உயிர்பெற்றெழத் திருவருள் பாலித்தார்.

ஏயர்கோன் கலிக்காமர் உயிர்பெற்று எழுந்து சுந்தரரின் கையில் இருந்த உடைவாளைத் தடுத்தார்.

பின்னர் இரு அடியார்களும் பகை மறந்து தம்முட்கூடி மகிழ்ந்தனர். இருவருமாகத் திருப்புன்கூருக்குச் சென்று இறைவழிபாடு செய்தனர். அங்கே சுந்தரர், "அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத" என்னும் திருப்பதிகம் பாடி இறைவனைத் துதித்தார்.

பின்னர் இருவரும் தத்தம் ஊர் திரும்பினர்.

**வாழ்க சீர் அடியார் எல்லாம்.**

உ

# 2010ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவி புரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| சித்திரா மாணிக்கவாசகர் | நியூசிலாண்ட் | 10,000.00 |
| திருமதி மகேஸ்வரி செந்திமாணிக்கம் (கோலாலம்பூர் - மலேசியா) | | 10,000.00 |
| புவனசுந்தரம் மகாத்மா சோதி குடும்பம் - நோர்வே | | 5,000.00 |
| ஏரம்பமூர்த்தி சிவபாக்கியம் நினைவாக சுவிஸ் | | 10,000.00 |
| ந. ஸ்ரீகரன் கே.கே.எஸ். றோட் யாழ்ப்பாணம் | | 2,000.00 |
| உதயலிங்கம் யோகாம்பிகை (பிரான்ஸ்) மூளாய் | | 28,000.00 |
| திரு. சுரேஸ்குமார் | சேயோன் -மூளாய் | 5,000.00 |
| ச. ஜீவகுமார் (பிரான்ஸ்) | கோண்டாவில் | 5,000.00 |
| சற்குணநாதன் மதுஷா | வரணி | 500.00 |
| ஆறுமுகம் தேவராசா | மூளாய் | 1,000.00 |
| ஆறுமுகம நாகராசா | மூளாய் | 1,000.00 |
| பொன்னையா தர்மராஜகுலசிங்கம் | | 5,000.00 |
| வேணி ஸ்ரோர்ஸ் 1மூ. அரிசி, 1 புட்டி பருப்பு, 3 புட்டி கிழங்கு, 1 புட்டி வெங்காயம் | | |
| திருமதி தவமலர் சுரேந்திரநாதன் | தொண்டைமானாறு | 2,000.00 |
| திரு. ஞானச்சந்திரன் | தாவடி, கொக்குவில் | 2,000.00 |
| ஆ. விநாயகமூர்த்தி | சாளம்பை, கரணவாய் மத்தி. | 2,000.00 |
| P. துரைசிங்கம் | வாசல றோட், கொழும்பு | 1,000.00 |
| இரட்ணதேவி | நவிண்டில் | 500.00 |
| ச. சுதர்சனா | அச்சுவேலி | 4,100.00 |
| அகிலரூபன் லோகநாயகி | லண்டன் | 5,000.00 |
| க. செல்வரெத்தினம் J.P. | ஆஸ்பத்திரிவீதி, அச்சுவேலி | 10,000.00 |
| S. நேசரெட்ணம் | லண்டன் | 5,000.00 |
| அ. தங்கேஸ்வரி | அல்வாய் | 1,000.00 |
| நடேசன் சுரேசன் | உரும்பராய் தெற்கு | 1,000.00 |
| செ. சூரியகுமார் | இன்பர்சிட்டி | 5,000.00 |
| சி. சுப்பிரமணியம், கயிலாயபிள்ளை வீதி, சாவகச்சேரி | | 2,000.00 |
| ந. கிரிதரன் | காளிகோயிலடி, கரவெட்டி | 2,000.00 |
| பொ. பரமேஸ்வரி | இணுவில் | 1,000.00 |
| S. சுந்தரலாதர் | வட்டுக்கோட்டை | 500.00 |
| முத்துப்பிள்ளை சுபாகரன் | புத்தூர் | 2,500.00 |

| | | |
|---|---|---|
| இராசையா இராகுலன் | சாமியன் அரசடி, கரவெட்டி | 5,000.00 |
| திரு. வைரமுத்து | சண்டிலிப்பாய் | 10Kg அரிசி, மரக்கறி |
| த. கோபாலகிருஸ்ணன் | வல்வெட்டித்துறை | 10,000.00 |
| சி. குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | பத்தமேனி | 1,000.00 |
| மகேந்திரம் தர்ஷினி | C.A. நிறுவனம் | 3,000.00 |
| K. மகாலிங்கம் | ஞானகி லேன், கொழும்பு | 1,000.00 |
| சற்குணராசா கலைச்செல்வி | நோர்வே சி.வை.ஆ. | 3,000.00 |
| ஐங்கரன் | நவாலி | 800.00 |
| கா. அருளானந்தம் | சங்கானை | 1,000.00 |
| S. லோகேஸ்வரன் | நுணாவில் | 1,000.00 |
| இ. சிவபாதம் (மனோகரா) | அல்வாய் | 2,500.00 |
| கா. ரூபலதா | புத்தூர் கிழக்கு | 1,000.00 |
| ஆனந்தராசா கலாஜினி | வட்டு. மேற்கு | 3,000.00 |
| T. கணேசலிங்கம் | அல்வாய் தெற்கு | 4,000.00 |
| சுப்பிரமணியம் குடும்பம் | கோண்டாவில் | 1,000.00 |
| த. சசிக்குமார் | சுவிஸ் | 5,000.00 |
| N. திரவியம் | புலோலி | 1,000.00 |
| கி. சுகந்தினி | புத்தூர் | 5,000.00 |
| சொ. சந்திரகுமார் | கனடா | 2,000.00 |
| குகனேசன் ஞானசுந்தரம் | கனடா | 33,000.00 |
| Dr. அனுஷியா | ஐயாகடையடி, சாவகச்சேரி | 2,000.00 |
| Dr. அனுஷாந்தினி கந்தையா | சாவகச்சேரி | 1,000.00 |
| அரியரெட்ணம் மதனகாந்தி (நினைவு) | வல்வை | 5,000.00 |
| பாப்பம்மா தம்பிமுத்து | புலோலி தெற்கு | 100,000.00 |
| ஜெகதீஸ்வரன் தர்ஷினி | புத்தூர் (கப்பூது) | 4,500.00 |
| சிவபாலசுந்தரம் சுபேந்திரன் | இமையாணன் | 1,000.00 |
| சச்சிதானந்தம் குடும்பம் | இமையாணன் | 500.00 |
| சுஜிபாலா | ஜேர்மனி (அனலைதீவு) | 10,000.00 |
| நிரோஜன் | ஜேர்மனி | 1,000.00 |
| திலகரெட்ணம் யோகரமணன் | பாமன்கடை ஒழு. வெள்ளவத்தை | 10,000.00 |
| ச. மனோரஞ்சிதம் நினைவு ச. இராசரெத்தினம் | நாவலர் வீதி. | 5,000.00 |
| பொ. ஞானச்சந்திரன் | கோணாவளை கொக்குவில் | 1,000.00 |
| சண்முகநாதன் உதயகுமார் | கரணவாய் மத்தி. | 5,000.00 |
| முரளிதரன் தவரூபி | அவுஸ்திரேலியா | 5,000.00 |
| N. இராசகுரு குடும்பம் | திருமலை | 5,000.00 |
| செல்வநாயகம் | ஜேர்மனி | 6,000.00 |

பண்பில்லாத இடத்தில் சுதந்திரம் இருக்க முடியாது



# திருவிளையாடல்

## இரசவாதஞ் செய்த படலம்

**ஆறுமுகநாவலர் – படலம் – 36**

பாண்டி நாட்டிலே **திருப்பூவணம்** என்னும் சிவதலம் ஒன்றுண்டு. இந்திரன், சூரியன் முதலான தேவர்கள் பலரும் இங்கே சிவபூசை செய்து பெறற்கரிய வரங்களைப் பெற்றார்கள். அந்தத் திருக்கோயில் பணி செய்யும் உருத்திர கணிகையருள் **"பொன்னனையாள்"** எனப் பெயர் கொண்ட பெண் ஒருத்தியிருந்தாள். அவள் அழகிலும் ஆடல்பாடலிலும் தெய்வப் பெண்களுக்குச் சமமானவள். தருமநூல்வழி ஒழுகும் நல்லொழுக்கத்தில் அவர்களுக்கும் மேலானவள். தினமும் சூரிய உதயத்தின் முன் எழுந்து ஸ்நானம் செய்து, சிவபூசை முடித்து, திருக்கோயில் சென்று சிவலிங்கப் பெருமானைத் தரிசித்து மீண்டு வந்து சிவனடியார்களைச் சிவனெனப் பாவித்துப் பூசைசெய்து திருவமுது செய்வித்து, அவர்கள் புசித்து எஞ்சியதையே தானும் புசித்து வரும் நியமம் கொண்டவள் அவள்.

பொன்னனையாளது அன்பை உலகத்தாருக்கு அறிவிக்கும் பொருட்டுச் சிவபெருமான், தமது திருவுருவினை வார்ப்பிக்கும் ஆசையை அவளுக்குக் கொடுத் தருளினார். இறைவன் திருவுருவை வார்ப்பிக்கும் எண்ணம் மிகக் கொண்டிருந்த போதும் தினந்தோறும் வரும் பொருளெல்லாம் மகேஸ்வர பூசைக்கன்றி எஞ்சாமை யினாலே "திருவுரு வார்ப்பது எப்படி?" என எண்ணி வருத்தமுற்றிருந்தாள்.

சிவபெருமான் நீறணிந்த திருமேனியராகி கையில் வீபூதிப் பையுடன் பொன் னனையாள் வீட்டுக்கு அமுது செய்யவரும் ஏனைய அடியவர்களுடன் தானும் ஒருவராக எழுந்தருளி வந்து, உள்ளே புகாது ஒரு பக்கத்தில் அமர்ந்திருந்தார். மற்ற அடியாரெல்லாம் திருவமுது செய்துகொண்டு போனபின், இவரைப் பொன் னனையாளின் உதவிப் பெண்கள், "திருவமுது செய்ய உள்ளே எழுந்தருளும்" என்று அழைத்தனர். அதற்கு அவர், "உங்கள் தலைவியை இங்கே அழைத்து வாருங்கள்" என்று தெரிவிக்க, அவர்களும் பொன்னனையாளை அழைத்து வந்தனர். வந்தவள் அவரை வணங்கி உள்ளே வந்து அமுதினை ஏற்குமாறு பணிந்து நின்றாள்.

சித்தர் சுவாமிகள் தம்முள்ளே சிரித்தபடி பொன்னனையாள் மீது திரு

நோக்கம் செய்து, "பேரழகுடைய பெண்ணே! ஏன் சற்று இளைத்திருக்கிறாய்? உன் வாட்டத்திற்குக் காரணம் யாது?" என வினாவினார். "எம்பெருமானே! அடியேனுக்கு எவ்வித குறையுமில்லை. சிவபெருமானுடைய திருவுருவம் ஒன்றினை வார்ப்பிக்க எண்ணியும் பொருளின்மையால் எண்ணம் நிறைவேறாமல் உள்ளது. தினந்தோறும் கையில்வரும் பொருளெல்லாம் மகேஸ்வர பூசைக்கே செல்கின்றன. ஒன்றும் மிஞ்சுவதாயில்லை'' என மிகுந்த வருத்தத்துடன் கூறினாள். "பெண்ணே! சரீரம் - இளமை - செல்வம் அனைத்துமே நிலையில்லாதவை எனக்கண்டு, நிலையானது தருமம் ஒன்றே எனத் தெளிந்து நின்றாய். தருமத்துள்ளும் சிவதர்மமே விசேடம் என்றும், சிவதருமத்துள்ளும் சிவபூசையே விசேடம் என்றும், சிவபூசையுள்ளும் மகேஸ்வர பூசையே விசேடம் எனத் தெளிந்து செய்து வருதலினால் நீ பெரும் பேறு பெற்றாய். நீ உன் விருப்பப்படியே திருவுருவைப் பொன்னாலே வார்ப்பிப்பாய். உன் வீட்டிலுள்ள பித்தளைப் பாத்திரம், ஈயப் பாத்திரம் போன்ற அனைத்தையும் இங்கே கொண்டு வா'' எனத் திருவாய் மலர்ந்தார். பொன்னனையாள் வீட்டிலிருந்த வெள்ளி, செம்பு, வெண்கலப் பாத்திரங்கள் அனைத்தையும் கொண்டு வந்து சித்தர் சுவாமி முன்பாக வைத்தாள். சித்தர் சுவாமி அவைகளின் மீது விபூதியைத் தெளித்தபடி, "நீ இன்றிரவு இவைகளை அக்கினியில் இட்டு எடுக்க இவைகள் பொன்னாய் விடும். அதைக்கொண்டு சிவபெருமான் திருவுருவை வார்ப்பிக்கக் கடவாய்'' என்று கூறியதுடன், "யாம் மதுரையிற்சித்தர்" என்றும் திருவாய் மலர்ந்து மறைந்தருளினார்.

பொன்னனையாள், சித்தராய் வந்தவர் சோமசுந்தரக் கடவுளே எனத் தெளிந்து, "மறைந்து போயினார்'' எனக் கவலையடைந்தாலும், "தன் கவலையை நீக்கினார்'' எனப் பேரானந்தம் கொண்டாள். சித்தர் அருளியபடியே அன்றிரவு அக்கினியில் இட்டு எடுக்க அவை அனைத்தும் பொன்னானமை கண்டு மிக்க மகிழ்ந்து சிவபெருமானுடைய திருவுருவை வார்ப்பித்தாள். அத்திருவுருவின் பேரழகைப் பார்த்து, "அழகிய பிரான்" என்று சொல்லி, கிள்ளி முத்தங்கொண்டு அதனைப் பிரதிஷ்டை செய்வித்து விழா எடுப்பித்தாள். இறைவன் திருத்தொண்டினோடு இயைந்திருந்த பொன்னனையாள் சில காலத்தின் பின்னர் முத்திப் பேறடைந்தாள். பொன்னுருவேயாகி பொன்னனையாள் இட்ட நகக் குறியுடன் என்றும் கலியுகத்தாருக்கு பேறுடைய பெருமானாக எழுந்தருளியிருக்கிறார் இறையனார்.

## சோழனை மடுவில் வீழ்த்திய படலம்

படலம் – 37

இராசேந்திர பாண்டியன் சிவபதமடைந்த பின் இராசேசபாண்டியன், இராசகம்பீரன், பாண்டிவமிசதீபன், புரந்தரசித்து, பாண்டிவமிசபதாகன், சுந்தரேசபாதசேகரன் எனப் பரம்பரையாக பாண்டியவமிசஅரசர்கள் பாண்டியநாட்டை அரசாண்டு வந்தனர்.

சுந்தரேசபாதசேகர பாண்டியன் சோமசுந்தரக் கடவுளுக்கு மெய்யன்பனாகி அரசியற்று நாளிலே மிகக்குறைந்த சேனையைமட்டுமே வைத்திருந்து அதற்கான செலவினங்களையும் மட்டுப்படுத்தி எஞ்சிய பொருளெல்லாவற்றையும் சோமசுந்தரர் திருப்பணிக் காரியங்களுக்கே செலவிட்டு வந்தான். சிவபெருமானுக்கு இரத்தினங் கள் பதித்த முடி முதலானவற்றைச் செய்வித்தும் கோபுரம் - மாடம் முதலியவை களை இரத்தினம் இழைக்கப்பெற்ற பொற்றகட்டினால் வேய்வித்தும் இன்னும் பணிகள் பலவும் செய்வித்து வந்தான்.

"ஆயிரம் பரிக்கோர் சேவகம்" என்னும் சோழ மன்னனொருவன் பாண்டியனது சேனைச் சுருக்கத்தை அறிந்து அவனை வெல்லக் கருதி எண்ணில்லாத சேனை களோடு மதுரையை நோக்கிச் சென்றான். இதை அறிந்த பாண்டியன் சோமசுந்தரக் கடவுள் திருக்கோயிலை அடைந்து, "எம்பெருமானே! எனது படை பலத்தைக் குறைத்து சிவதொண்டினில் காலத்தைக் கழித்தேனே! என் பலவீனம் கண்டு சோழன் படையெடுத்து வந்துள்ளானே! யான் என் செய்வேன்?" என்று மனம் மிக நொந்து விண்ணப்பித்தான். அப்பொழுது இறைவன் திருவருளினாலே, "பாண்டியனே! நீயே வெற்றியடையும்படி யாம் வந்து யுத்தம் செய்வோம். அஞ்சாதே!" என ஓரசரீரி வாக்குத் தோன்றிற்று.

அதுகேட்ட பாண்டியன் மனம்மகிழ்ந்து அரண்மனை திரும்பி, தன் சேனை சூழ சோழனை எதிர்த்தான். சிவபெருமான் திருவருளினாலே பாண்டியனின் சிறு சேனை யானது பெருங்கடல்போலத் தோன்றிற்று. அத்துடன் சோமசுந்தரக் கடவுளும் ஒரு வேடுவ வடிவங்கொண்டு வேலாயுதம் ஒன்றினைக் கையிலேந்தி பாண்டியன் சேனைக்கு முன்பாக ஒரு கூற்றுவன் போலப் போய் நின்றார். வேலாயுதத்தைச் சுழற்றியபடி வேடுவர் வந்த வேகத்தைக்கண்ட சோழன், "நாம் இனி இவ் வேலாயுதத்தினால் இறப்பதைத்தவிர வேறு வழியேயில்லை" என்று நினைத்து தன் குதிரை யோடும் பின் வாங்கி ஓடிப் போனான். வேடுவராக வந்த சிவபெருமானும் மறைந்து போனார். பாண்டியன் சோழனைத் துரத்திக் கொண்டு போனான். திரும்பிப் பார்த்த சோழன் வேடுவரைக் காணாமையினால் அச்சம் தெளிந்து, மீண்டும் பாண்டியனை மதுரை வரையும் துரத்திக் கொண்டு வந்தான். ஓடிவந்த பாண்டியன் மதுரைக்கு மேற்கே யுள்ள ஒரு ஆழமான மடுவில் வீழ, சோழனும் தன் குதிரையுடன் அதில் வீழ்ந் தான். சிவபெருமானின் திருவருளினாலே பாண்டியன் எழுந்துவிட, சோழன் மடுவில் ஆழ்ந்து இறந்து விட்டான். சோழனின் படைகளையும், குதிரைகள் யானை கள் தேர் மற்றும் பொருட்கள் அனைத்தையும் தனதாக்கிக் கொண்டான் பாண்டியன். சோமசுந்தரக் கடவுள் சந்நிதிக்குச் சென்று வஸ்திரங்களும் ஆபரணங்களும் அளித்து அவருடைய திருவருட் கடலுக்குப் பாத்திரமாகி வீற்றிருந்தான்.

உ

(தொடர்ச்சி...

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

பலரும் இறைவனிடம் வெவ்வேறு முறைகளில் பல்வேறு வகையான வேண்டுதல்களைச் செய்ததை இதுவரை பார்த்தோம். வேண்டுதல் செய்தவர்களுக்கு இறைவன் அருள்புரிந்ததையும் கண்டோம்.

சேந்தனார் தமது திருப்பல்லாண்டுப் பாடலிலே "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்" எனப் பாடி, இறைவன் நாம் கேட்பதற்கு மேலதிகமாக வாரி வழங்குபவர் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

"வேண்ட முழுதும் தருவோய் நீ" என்று பாடிய மணிவாசகப் பெருமான் "பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து" என்றும் பாடியுள்ளது இங்கு நோக்கத் தக்கது.

"குழந்தையின் பசியறிந்து அன்னை பாலூட்டுவாள், குழந்தைக்கு வயிற்றில் நோயிருக்கும் போதும் அது அழும், அது அழுகிறதேயென்று பாலூட்டிவிடக் கூடாது. அப்பொழுது பாலூட்டுவது சிலசமயம் குழந்தையின் நோயை அதிகரித்துவிடும். இது பற்றியெல்லாம் சிந்தித்து, தாய் குழந்தைக்கு உகந்ததையே கொடுப்பாள். தீமை பயக்கக்கூடியவற்றைக் கொடுக்கமாட்டாள். "பால்நினைந்தூட்டும் தாய்" எனக் கூறும்போது இவற்றையும் சேர்த்தே தாயினது அன்பின் தன்மையாக மாணிக்க வாசகப் பெருமான் கருதியிருப்பார். இதே கருத்தினையே "வேண்டத்தக்கது அறிவோய் நீ" என்று பாடும்போதும் அவர் புலப்படுத்தியுள்ளார்.

"வேண்ட முழுதும் தருவோய் நீ" எனப்பாடும்முன் அதனைப் பாடியதனால் "எனக்கு வேண்டியவற்றை அறிந்த நீ அவற்றையே எனக்குத் தருவாய்" என்ற நம்பிக்கை அதனுள் தொக்கு நிற்கின்றது. தக்கது என்ற சொல்லையும் அவர் பயன்படுத்தியிருப்பதைக் கவனிக்க வேண்டும். எனக்கு வேண்டியது உடை என்றால் வெயில் காலத்தில் அதற்கு ஏற்றதல்லாத கம்பளி உடையையும் ஒருவர் வாங்கித்தரலாம். அப்படி வாங்காது தகுந்த உடையை வாங்கிக் கொடுக்கவேண்டும். தக்கது என்று அவர் குறிப்பது இதனையேயாகும்.

எமக்கு வேண்டிய எது என்பது எமக்குத் தெரியாது. இறைவனுக்கே அது தெரியும். நான் நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறேன். எனக்குச் சர்க்கரைப் பொங்கல் விருப்பமான உணவு. எனினும் அவ்வுணவு எனக்கேற்றதல்ல. திடீரென சில காரணங்களால் எனது இரத்தத்தில் சர்க்கரையின் அளவு குறைந்துவிடுகிறது. இப்போது சர்க்கரையை உண்பது எனக்கு அத்தியாவசியமான ஒன்றாகிவிடுகிறது.

இன்று நாம் மிகமிக விரும்பி வேண்டி நிற்கும் ஒரு பொருள் நாளை நமக்குப் பாதகமானதாக அமைந்துவிடலாம். அல்லது இப்பொழுதே அது தீமைவிளைவிக்கும் ஒன்றாக இருக்கலாம். இப்போது எமக்குத் தேவையற்றதென நாம் கருதும் பொருள் வருங்காலத்தில் எமக்கு மிகப் பயனுள்ள ஒன்றாக அத்தியாவசியமாகத் தேவைப்படலாம். இவற்றை முற்கூட்டியே உணர்ந்து எம்மால் வேண்டுதல் செய்யவியலாது, நமக்கு எது நன்மையளிக்குமென்பதையும் எது தேவையானது என்பதையும் இறைவனே அறிவான். ஆதலால் எமக்கு வேண்டியதை இறைவனே தேர்வு செய்து எமக்கு அருள் புரிவதே நமக்கு நன்மை தருவதாக அமையும்.

இதையே "வேண்டுபவருக்குத் தேவையானது எதுவோ அவருக்கு வேண்டியதான அந்தப் பொருளை இறைவன் ஈவான்" என்னும் கருத்துக்கொண்டதாக "வேண்டுவார் வேண்டுவதை ஈவான் கண்டாய்'' என அப்பரடிகளும் பாடியிருப்பதாக முன்னைய கட்டுரையொன்றில் பார்த்தோம். இவ்வாறு இறைவன் எதை எமக்கு வேண்டியதென அருள் செய்கிறானோ அதையே தான் வேண்டுவதாக "வேண்டி நீ யாது அருள்செய்தாய். யானும் அதுவே வேண்டின்" என மாணிக்கவாசகப் பெருந்தகையும் பாடியுள்ளார்.

அவரது இந்த வேண்டுதலை நாம் கருத்தூன்றிக் கவனிக்க வேண்டும். இந்த வேண்டுதலைச் சரிவர விளங்கிக் கொண்டு அதே வேண்டுதலைச் செய்வோமானால் நமது தேவைகள் நிறைவேறும். இப்பொழுது குழைத்தபத்திலுள்ள இப்பாடலை முழுமையாக ஒருமுறை பார்ப்போமா?

வேண்டத் தக்க தறிவோய் நீ
　　வேண்டமுழுதுந் தருவோய் நீ
வேண்டும் அயன்மாற் கரியோய் நீ
　　வேண்டி என்னைப் பணிகொண்டாய்
வேண்டி நீயா தருள் செய்தாய்
　　யானும்அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசொன் றுண்டென்னில்
　　அதுவும் உன்றன் விருப்பன்றே.

நாம் கேட்பதை முழுவதுமாக இறைவன் தருவான். அதற்கு அதிகமாகவுந் தருவான். அதனால் அவனிடம் "அதுவேண்டும், இதுவேண்டும்'' என்று நம் மனம் போன போக்கில் வேண்டுதல் செய்யக்கூடாது. அவனிடமே எல்லாப் பொறுப்பையும் ஒப்படைத்துவிட வேண்டும். "எனக்கு வேண்டியதை நீயே அருளிச் செய்'' என்று மட்டும் வேண்டுதல் செய்தால் போதுமானது.

நமக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பை மர்க்கட சம்பந்தம், மார்ஜர சம்பந்தம் என வகைப்படுத்துவர். மர்க்கடம் என்றால் குரங்கு. மார்ஜரம் என்றால் பூனை. குரங்குக்குட்டி தாயை இறுக்கிக் கட்டிப்பிடித்துக் கொள்ளும். தாய்


அதனைத் தான் கொண்டுசெல்ல வேண்டிய இடத்திற்குக் கொண்டு செல்லும். பூனைக்குட்டி தாயைப் பற்றிப் பிடித்துக்கொள்வதில்லை. தாய் தான் செல்லவேண்டிய இடத்திற்கு அதனைத் தூக்கிச் செல்லும். தம்முட் சிலர் குரங்குக் குட்டி போலவும் சிலர் பூனைக்குட்டி போலவும் உள்ளனர்.

எப்படியிருப்பினும் குரங்குக்குட்டியுஞ்சரி பூனைக்குட்டியுஞ்சரி தாயிடமே தம்மை ஒப்புவித்துவிட்டு தாயையே நம்பியிருக்கின்றன. நாமும் இறைவனிடம் அனைத்துப் பொறுப்புகளையும் நம்மையும் ஒப்படைத்துவிட்டால் இன்பமே எந்நாளும் துன்பமில்லை.

(முற்றும்)

# செல்வச் சந்நிதிக் கந்தன்

## கழற்கோர் கவிமாலை (II)



பூசைகளெ லாமு டங்கத் தீதுசெயு வார டங்கி
ஊரிலிருந் தேய கன்று - செலுமாறும்
போதநின பாதந் தன்னை ஓதுகதிர் காமர்க் கந்த
போகமதை யேவ ழங்க - உளமாகி
ஓசைதரு வாரி சென்று மீளவரு வாரின் முன்பு
ஓரிடைய னாகி வந்து - கதிர்காமா!
ஒருணவு மீவ ரின்றி வாடுநிலை மாற வெந்தன்
பூசைதனை யேசெய் யென்று - உரைகோவே
ஆசை நிறை வேற கல்வி யாததுமி லானின் கண்ணை
மூடிக்கதிர் காமஞ் சென்று - அவைகாட்டி
ஆறுமுக னேவு வெள்ளி வேலதுவு மேவ ழங்கி
ஆரழல தேவ ணங்கு - முறையீந்தாய்
காசைநனி யேவிரும்பி காலதனை யேம றந்து
நாசினியி லேயு ழன்ற - நிலைமாறி
காததை வாகி யுந்தன் நாமபுக ழோது மன்பர்
காவலனை தாகி யென்று - முறைகோனே.

- **இராசையா குகதாசன்,**
**நாயன்மார்க்கட்டு.**

# படங்கள் தரும் பதிவுகள்



150 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில்
27.06.2010 விசேட பிரதிகள் பெற்றோர்






150 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில்
27.06.2010 விசேட பிரதிகள் பெற்றோர்



கடவுளுக்காக தொண்டு செய்தால் சுகம் கிடைக்கும்



150 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில்
27.06.2010 விசேட பிரதிகள் பெற்றோர்





150 ஆவது மலர் வெளியீட்டு நிகழ்வில்
27.06.2010 விசேட பிரதிகள் பெற்றோர்



உ

# தினம் தினம் ஆனந்தமே....

- சத்குரு ஜக்கி வாசுதேவ் அவர்கள்-

## பேராசை வேண்டாம்

'எதை நீங்கள் பேராசை என்பீர்கள்?

உடனடியாக பதில் சொல்லிவிட முடியாத ஒரு சிக்கலான கேள்வி இது.

மாளிகை வீட்டில் வசிப்பது என்பது ஒருவருக்கு அத்தியாவசியமாக இருக்கலாம். ஆனால் வேறொருவருக்கு இது பேராசையாகத் தோன்றும்

சில காலத்திற்கு முன்பு ஒரு துறவியைச் சந்தித்தேன். தனக்கென ஒரு குடிலைக் கூட உருவாக்கிக் கொள்ளாமல், ஒரு மரத்தடியிலேயே வசித்து வந்தார் அவர்.

இதனாலேயே அவர், தங்களுக்காக குடில்களை அமைத்துக் கொண்ட பிற துறவிகளை ஏளனம் செய்வதை தனது வாழ்வின் குறிக்கோளாகவே கொண்டிருந்தார்.

"நான் இயற்கையின் சீற்றங்களை தைரியமாக எதிர்கொண்டு மரத்தின் நிழலில் சாதாரணமாக வாழ்ந்து வரும்போது, அவர்கள் (மற்ற துறவிகள்) சுகமாகவும் ஆடம்பரமாகவும் வாழ்வதற்காக குடில்களை அமைத்துக் கொண்டு, தங்களையே இழந்து கஷ்டப்பட்டுப் போகிறார்கள்' என்று பேசிப்பேசியே அவர் தனது வாழ்நாளைக் கழித்தார்.

"அவர்கள் எல்லோரும் பகட்டானவர்கள். தங்களது குடில்களை அவர்கள் அலங்கரித்துள்ள விதத்தை வைத்தே அதைத் தெரிந்து கொள்ளலாம்" என்று என்னிடமும் அவர் குறைப்பட்டுக் கொண்டார்.

ஆனால், மற்றத் துறவிகள் அவர்களது குடில்களை அழகுபடுத்த செய்தது என்னவோ, சிறிய பூந்தோட்டம் ஒன்றை அமைத்ததும், குடிசைகளுக்குக் கொஞ்சம் வண்ணம் தீட்டியதும்தான். இவை எல்லாம் பகட்டானவை என இந்தத் துறவி நினைத்திருந்தார். அதனால்,

"மற்றவர்களைவிடத் தான் மேலானவன் என ஒருவன் நினைப்பதே மிகவும் பகட்டானது. முட்டாள்தனமானது" என்று நான் அவருக்கு நினைவூட்டிவிட்டு வர வேண்டியதாயிற்று.

உங்களது கண்ணோட்டத்தில், நீங்கள் எப்போதுமே பேராசைப்படுவதே

இல்லை. நீங்கள் பெற வேண்டும் என்று ஆசைப்பட்டதை வேறொருவர் பெற்றுவிட்டார் என்றால், அந்த இன்னொருவரை பேராசைக்காரர் என நினைக்கிறீர்கள்.

நீங்கள் முயன்று பார்த்தும் சம்பாதிக்க முடியாத ஒரு கோடி ரூபாவை, வேறு யாராவது சம்பாதித்துவிட்டார் என்றால் போதும்; அது உங்கள் பார்வையில் பேராசையாகத் தெரிகிறது. அதையே நீங்கள் சம்பாதித்திருந்தால், 'ஒரு கோடி என்பது பேராசை அல்ல; 10 கோடி என்றால்தான் அது பேராசை' என்பீர்கள் இல்லையா? ஏனென்றால், அதைப் பெற்றிருப்பவர் நீங்கள் இல்லையே... வேறு யாரோ ஒருவர்தானே?

மிகவும் ஆழமான ஒரு பற்றாக்குறை உணர்வு உங்களிடம் இருப்பது தான் இதற்குக் காரணம். அதனாற்றான் மேலும் மேலும் சேகரித்துக்கொண்டே இருக்கின்றீர்கள்.

நீங்கள் இருக்கும் நிலை உங்களுக்குப் போதுமானதாக இல்லை. தற்போது இருப்பதைவிட இன்னும் மேலாக இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள். அந்த நிலையை அடைந்த அடுத்த கணமே, இன்னும் சற்று அதிகமாக, மேலும் அதிகமாக, மேலும் மேலும் அதிகமாக என... இப்படியே போக விரும்புகிறீர்கள்.

உங்களை இந்தக் கிரகத்தின் அரசனாகவோ, அரசியாகவோ ஆக்கினாலும் - கவலைப்படாதீர்கள். அப்படிப்பட்ட ஒரு தவறைச் செய்யும் எண்ணம் எனக்கு இல்லை; நீங்கள் அத்துடன் நிற்கமாட்டீர்கள். அடுத்து நட்சத்திர மண்டலத்தைக் கேட்பீர்கள்.

ஏனென்றால், எல்லை இல்லாமல் விரிவடைய வேண்டும் என்கின்ற ஒரு வேட்கை உங்களுக்குள்ளே இருக்கிறது. நீங்கள் எவ்வளவுதான் கொடுத்தாலும், அதன் தாகம் தணியப் போவதில்லை.

நீங்கள் நட்சத்திர மண்டலத்தையே அதற்குக் கொடுத்தாலும் கூட, மேலும் பல நட்சத்திர மண்டலங்களை அதுகேட்கும். ஏனென்றால், எல்லையற்று விரிவடைவதே உங்களது உள்த் தன்மையின் இயல்பு.

ஆனால் இந்தத்தாகத்தை எல்லைக்கு உட்பட்ட பொருட்களைக் கொண்டு தீர்க்க நீங்கள் முயற்சிக்கிறீர்கள். 1, 2, 3, 4, 5.... என்று எண்ணத் தொடங்கினால், தொடர்ந்து எண்ணிக் கொண்டே போகலாமே தவிர, எண்ணிக்கை அற்றதை ஒரு போதும் அடைய முடியாது.

இது, மாட்டு வண்டியை ஓட்டிக் கொண்டு சந்திரனுக்குச் செல்ல நினைப்பது போன்றதொரு முட்டாள்தனமான செயல்.மாடுகளை அடித்து விரட்டினால் சந்திரனுக்கு வேகமாகப் போய் விடலாம் என நினைக்கிறீர்கள். அங்கு போய்ச் சேர வேண்டும் என்றால், அதற்குத் தகுந்த வாகனம் தேவை.

அது போலவே, எல்லையற்றதை அடைய வேண்டும் என்கிற உங்கள் உள்தன்மையின் தாகத்தை, பொருள் தன்மையைக் கொண்டு உங்கள் தேவைகளை ஒரு போதும் பூர்த்தி செய்யவே முடியாது. அங்கே ஆனந்தத்தையும் பெற முடியாது. பேராசை மட்டும்தான் மிஞ்சும்.

(ஆனந்தம் இன்னும் வரும்...)

உ

# "தர்ம சங்கடம்"

- சோ. பரமநாதன் அவர்கள் -

'தர்ம சங்கடம் என்பது மனிதனாகப் பிறந்த எல்லோரின் வாழ்விலும் ஏதோ ஒரு காலத்தில் பீடிப்பதாக மனிதர்கள் எண்ணுகின்றார்கள். ஆனால் தர்ம சங்கடம் என்னும் இச் சொற்பதமானது இந்து தர்மத்துடன் பின்னிப் பிணைந்து பரந்து பட்ட சொற்பரப்புக்குள் காணப்படுகின்றது. அதாவது "சங்கடம்" என்னும் பதம் யான் முன் கூறுவது போல் மனிதனாகப் பிறந்த எல்லோரையும் காலநேரமின்றி பற்றிப் பிடிக்கின்றது.

உதாரணமாக ஒரு மனிதனின் முகம் வாடிச் சோர்ந்திருக்கும் போது இன்னொருவர் அவரைப் பார்த்து "ஏனப்பா கவலையுடன் இருக்கின்றாய்? என்று கேட்டால், "அதை ஏன் கேட்கிறீர்? இன்று ஐந்து மணிக்கு முன்னர் பத்தாயிரம் சீட்டுக்காசு கட்ட வேண்டும்" என்றார்.

இன்னொருவரையும் இதே போன்ற சந்தர்ப்பத்தில் வினவியபோது அவர் மிகவும் கவலையுடன், "பத்து வருடமாக என்னை மனப்பூர்வமாக விரும்பியவள் கனடா மாப்பிள்ளைக்குக் கழுத்தை நீட்டி, கைவிரித்து விட்டாள். தர்ம சங்கடமாய்ப் போய்விட்டது" என்றார்.

உண்மையிலேயே தர்ம சங்கடம் என்பது நீதிக்கு நேர்மை, வாய்மை, என்ப வற்றை உள்ளடக்கியதும் பரந்து பட்டதும் ஆகும். மகாபாரதம், கம்பராமாயணம் என்பன இவற்றுக்கும் அப்பால் சென்று எம்மை எல்லாம் சிந்திக்க வைக்கும் வரலாற்றுச் சம்பவங்களை இங்கே கூறுவது பொருத்தமானதாகும். உ-ம்: தசரத சக்கரவர்த்திக்கு நேர்ந்த தர்ம சங்கட நிலையானது இராமனுக்கு முடி சூடுவதா? கைகேயிக்கு முன்பு கூறிய இரண்டு வரங்களையும் வழங்குவதா? அதே போன்று காரைக்கால் அம்மையார் கணவருக்கு கொடுக்க வேண்டிய மாம்பழத்தில் ஒன்றை சிவனடியாருக்கு கொடுத்துவிட்டு கணவனுக்கு பதில் சொல்ல வேண்டிய நிலை.

எனவே தர்ம சங்கடம் யாரைப் பற்றிப் பிடிக்கின்றது. சங்கடம் யாரிடம் வந்து சேர்கின்றது என்பதனை தெளிவு படுத்தும் நோக்கில் பல உதாரணங்கள் இருந்த போதிலும் ஒரு சிலவற்றை கூறியுள்ளேன்.

**தர்ம சங்கடம் : தெய்வீக மணம் கமழ்வது.**

**சங்கடம் : உலகியல் தன்மையுடன் தொடர்புடையது.**

உ

தொடர்

# கர்மமும் மறுபிறவியும் விதி

- கு. கோபிராஜ் அவர்கள் B.A. (Hons) (இந்து நாகரிகம் சிறப்பு) -

ஆனால் இந்த பாதிப்பு இவருக்குத் தெரியும். ஆனால் அவர் இதை ஏற்பதோ தடுப்பதோ இல்லை.

இதைப் போலவே கடவுள் நமது வாழ்வில் செயற்படுகின்றார். நமது காரியங்களின் நன்மை தீமைகளை அவர் கணக்கில் வைத்து, வகுத்துக் கொள்கிறார். நாம் இதனால் நன்மை பெறுவதாகும். அவர் வசதி செய்து தருகின்றார். ஆனால் பலனை அடையும் பொறுப்பு நம்முடையது.

விளக்கை ஏற்றித்தருவது கடவுளின் கடமை. அதனை ஞான நூலை படிக்கவோ, சீட்டாட உபயோகிப்பதோ நம்முடைய வசம்தான் இருக்கின்றது. கடவுள் எங்கும் வியாபித்துள்ள சக்தி. அவர் நமக்கு உடம்பு, உள்ளம், சூழ்நிலை எல்லாவற்றையும் கொடுத்துள்ளார். அதனை நல்லமுறையில் பயன்படுத்துவது நம் கையில்தான் உள்ளது.

நமது வாழ்வை "பிறிட்ஜ்" விளையாட்டுக்கு ஒப்பிடுகின்றார் பேராசிரியர் ராதாகிருஷ்ணர். இவ் விளையாட்டில் நமக்கு கிடைக்கும் சீட்டுக்களைப் போல நமது பழவினைகளை வைத்துக் கொள்ளலாம். இச்சீட்டுக்கள் நாம் நம் விருப்பப்படி தேர்ந்தெடுப்பதில்லை. சீட்டுக்களை தேர்ந்தெடுக்க எமக்கு உரிமை இல்லாவிடினும் அச்சீட்டுகளைக் கொண்டு வெற்றி தோல்வி ஈட்டும் வாய்ப்பு நமக்குண்டு. இதைப் போலவே பழவினையை தெரிந்தெடுக்க அதிகாரம் இல்லாவிடினும் அதை வைத்தது போலவே ஆக்கவோ அழிக்கவோ யாவும் நமது கையிலேயே உள்ளது.

கர்மங்களைச் செய்யும் போது அதை ஒரு பாரமாகவோ, சுமையாகவோ கருதிச் செய்யாமல் அது "இறைவனால் இட்ட கட்டளை" எனும் பாவனையில் மனத்திருப்தியோடு செய்ய வேண்டும். கிருஷ்ணன் "நான் கர்மத்தைச் செய்து கொண்டுதான் இருக்கிறேன்" எனும் தத்துவத்தை விளக்குகின்றார். இதில் மனித அவதாரமாகவோ, ராமனாகவோ, வாமனராகவோ, பலராமனாகவோ, பரசுராமனாகவோ, கிருஷ்ணராகவோ தோன்றி கர்மங்களுக்கு தன்னையும் ஆளாக்கி அருள் புரிந்தவர். ஸ்ரீமத் நாராயணன்

ஆவார். கிருஸ்ணர் அர்சுனனை நோக்கி "கர்மங்கள் எல்லாம் எனக்கு அர்ப்பணித்து சித்தத்தை சைதன்யத்தில் வைத்து ஆசை களையும் நான் எனும் மமதையையும் அகற்றி மனக்கொதிப்போ கலக்கமோ இன்றி போர் புரிந்து உன் கடமையை ஆற்று வாயாக" என்று பகவான் அர்ச்சுனனுக்கு போர்க்களத்திலே உபதேசித்தார். வினையை விளக்காகக் கொண்டால் நல்வினையை பொன்னால் செய்த விளக்காகக் கொள்ள லாம்.

பற்றோடு கர்மங்களைப் புரிபவன் பாமரன் அல்லது சாதாரண மனிதன். பற் றற்று கன்மங்கள் புரிபவன் ஞானி அல் லது யோகி. "கர்ம", "அகர்ம", "நகர்ம" என 3 சொற்கள் உண்டு

கர்ம - நல்லசெயல்

அகர்ம - தீய செயல்

நகர்ம - ஒன்றுமே செய்யாமல் சும்மா இருப்பது ஆகும். மேலும் பற்றற்ற வினைதான் பிறப்பை ஒழிக்க அதாவது நல்வினையைத் தான் வைத்தேன் என்ற வாறு செய்யாது அதன் பலனை எதிர் பாராது எல்லாம் திருவருள் என்ற கருத் தோடு செய்வதே பற்றற்ற வினையாகும். இதனையே சைவ சித்தாந்தம் நல்வினையை விட மேலானதாகக் கொள்கிறது. கர்ம பலன்கள் தம்மை அணுகாமல் செய் வதற்கு இதுவே வழியாகும். தீவினைப் பயன்களில் விருப்பம் கொள்ளாத ஒரு நிலையை அடையவேண்டும். இதுதான் சைவசித்தாந்த இரு வினையொப்பு என்ற பெயரால் குறிப்பிடப்படுகின்றது. துன்பம் பலவற்றையும் துடைக்க இதுவே வழி மூவகை விளக்கமும் விதியை ஒப்புக் கொள்வதனால் முயற்சிக்கு இடமில்லை என்பது பொருந்தாது. பற்றற்ற வினையே நல்வினையை விட மேலான பிறப்பை அழிக்கும் ஒரே வழி ஆகும்.

## விதியின் பயணம்

யதார்த்தத்தில் விதியின் ஒத்து ழைப்பு முக்கால் பங்கு முயற்சி கால் பங்கு இந்துக்கள் பெரும்பாலும் கூறுவார் கள். எல்லாவற்றுக்கும் காலநேரம் வர வேண்டும். இதில் இதற்கு என்ன கார ணம்? இன்ன காரியங்கள் உனக்கு இன்ன காலங்களில் நடக்கும் என விதிக்கப்பட்டு இருக்கின்றது. இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது ஹிட்லருக்கு இருந்த ஆயுத பலமும் வேறு எந்த நாட்டிலும் இல்லை. ஒரே நாளில் போலந்தைப் பிடித் தான். வெறும் மிரட்டலிலே தான் செக் கோஸ்லாவியாவை பிடித்தான். அவன் விரும்பியிருந்தால் ஆறு நாட்களில் ஐரோப் பாவையும் பிடித்திருக்கலாம். வெறும் வாய் வேட்டுகளை விட்டுக் கொண்டு இருந்த சர்ச்சிலை அவன் கனடாவுக்கு துரத்தியடித் திருக்கலாம். அகில ஐரோப் பாவைப் பிடித்துவிட்டால் உலகத்தில் ஐரோப்பிய நாடுகளுக்கு காரணிகளாக இருந்த ஆசியா, ஆபிரிக்கா, அரேபிய நாடு கள் அவன் கைக்கு இயற்கையாகவே வந்திருக்கும். இது சுலபமாக நடக்கக் கூடியது. ஆனால் ஹிட்லரின் விதி ஹிட் லரின் ஆணவத் தையே ஆட்சி புரிந்தது.

பிரிட்டனை "கோழிக்குஞ்சு" என்று அவன் கேலி செய்துவிட்டு "யானையை சாப்பிட்டால்தான் என் பசி அடங்கும்" என சோவியத் யூனியனுக்குள் நுழைந்தான். அவனது சவக்குழி அங்கேதான் தோண டப்படுகிறது என்று விதி சிரித்தது. சோவி யத் யூனியனின் பருவகாலத்தில் அவன்

சக்தி சிக்கி இழுபட அமெரிக்காவும் பிரிட்டனும் தங்களை தயார் செய்து கொண்டு விட்டன. எச்சரிக்கையாக இருந்திருந்தால் உலகத்தையே ஆண்டு இருக்கக்கூடிய ஹிட்லர் தன் பிணத்தைக்கூட பிறர் பார்க்க முடியாதபடி இறந்து போனான். உலக வரலாற்றை கடந்து நோக்கும் போது இது புரிந்து கொள்ளப்பட்டது.

"நினைப்பவன் நீ முடிப்பவன் அவன்"

இந்துக்களின் தத்துவத்தில் இது முக்கியமானது. பிச்சைக்காரி ராணியான கதையும் ராஜா பிச்சைக்காரனானதையும் அதிஷ்டம் எனும் பெயரில் விதியின் பரிசளிப்பாகும். ராமனையும் விதி ஆண்டது. சீதையையும் விதி ஆண்டது. சோழ நாட்டுக் கோவலனின் விதி மாதவியின் மயக்கத்தில் இருந்தது. கண்ணகியின் விதி மதுரையிலும்,பாண்டிய நெடுஞ்செழியனின் விதி ஒரு காற்சிலம்பில் அடங்கியிருந்தது. யூலியஸ் சீசரின் விதி சொந்த நண்பரின் கையில் இருந்தது.

கடவுள் இல்லை என்று வாதிடுவோரை நீண்ட காலம் வாழ வேண்டும் என இறைவன் ஏன் விதிக்கின்றான்? தங்கள் கொள்கைகள் தங்கள் கண்முன்னாலே தோல்வியடைவதைக் கண்டு சாக வேண்டும் என்பதற்காகும்.

எனது அநுபவத்தின் உண்மை யாது எனின் மதியையே விதிதான். ஆட்சி செய்கிறது. சக்தியும் சிவனும் பூமியில் பல வேடங்களில் பிறந்ததாக இந்துக் கலைகள் கூறுவது இறைவன் தானும் விதிக்கு ஆட்பட்டு அதன் சுவையை அனுபவிக்கின்றான் என்பதைக் காட்டுகின்றது.

ஒரு மாணவன் பரீட்சைக்கு நன்றாகப் படிக்கின்றான். சிறந்த கெட்டிக்காரன் அவன். அனைத்துப் பாடத்தையும் சிறப்பாக கற்று முடித்து பரீட்சைக்கு தயாராக உள்ளான். பரீட்சைக்கு முதல் நாள் நோய் வாய்ப்பட்டு பரீட்சை எழுத முடியாமல் போகின்றது. இது அவனது கன்மமேயாகும். இன்னொரு மாணவன் பரீட்சையில் சிறப்பாக எழுதி அதன் சிறந்த பெறுபேற்றுடன் காணப்படுகின்றான். இறுதியாக மாணவ நிலையை தீர்மானிக்கும் போது பட்டப் படிப்பை மேற்கொள்ளும் போது மாணவன் 4 வருடத்தில் சிறப்பாக கற்று சிறந்த பெறுபேற்றுடன் காணப்பட இறுதியாக புதிய கல்வி சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்படுகின்றது. அதன் விடய அறிவை அறியாமற் போதல் அதற்கேற்ப தன்னையும் தனது பாட நெறியையும் தீர்மானிக்கத் தவறுகின்றான். இது அவன் கன்மமே ஆகும். ஒருவர் உயர் பதவிக்கு விண்ணப்பம் செய்தால், அது சில காரணங்களால் தவறிப் போவது இன்னொருவர் வேலை தேடி பல நேர் முகப்பரீட்சைக்கு செல்வது அனைத்தும் கன்மமே ஆகும்.

ஒருவர் உயர் பதவிக்கு விண்ணப்பிப்பதும் அது சில காரணங்களால் தவறிப்போவதும் இன்னொருவர் வேலை தேடி பல நேர்முகப் பரீட்சைக்கு செல்வதும் அனைத்து நேர்முகப் பரீட்சையிலும் தோல்வியடைந்தால் அது அவரது கன்மமே ஆகும். ஆபிரகாம் லிங்கனது வாழ்வின் அனைத்தும் தோல்வி. எதை எடுத்தாலும் அவரால் எதனையும் ஜெயிக்க முற்காலம் முடியவில்லை. பின்னர் ஜனாதிபதியானார். இதுவும் அவரது கன்மமே ஆகும்.

உ

# அறஞ் செய விரும்பு

- இராசையா ஸ்ரீதரன் அவர்கள் -

"அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்கின்றார் ஔவையார். இப் பூவுலகில் மனிதராய்ப் பிறக்க நாம் புண்ணியஞ் செய்திருக்க வேண்டும். இந்தப் புண்ணியத்தை நாம் எப்படிச் செய்வது? இதை யாராவது சிந்தித்திருக்கின்றீரகளா?. 'அறஞ் செய விரும்பு' இதுவும் ஔவையார் கூறியதுதான். இதில் வெளிப்படை யாகவே அறஞ்செய விரும்பு' என்று கூறப்பட்டுள்ளது.

எங்களால் முடிந்த அளவு தர்மஞ் செய்யவேண்டும். எமது இவ்வுலக வாழ் வில் நாம் நன்மை செய்யாவிட்டாலும் தீமையைச் செய்யக்கூடாது. இதில் ஒரு வேடிக்கை என்னவென்றால், ஔவையார் 'அறஞ் செய விரும்பு' என்று தான் கூறி னாரே தவிர, அதைக் கட்டாயம் செய்யத்தான் வேண்டும் என்று கூறவில்லை. ஏன்? என்ன காரணம்? அங்கேதான் விஷயமே இருக்கிறது. அதாவது தர்மம் செய்யும் போது உள்ளத்தால் முழுமனதோடு சந்தோஷமாகக் கொடுக்க வேண்டும். "இதென்னடா காலங்காத்தாலை வந்திட்டான்" என்று சினந்துகொண்டு கொடுத்தால், அது அற மல்ல. அதிலே எந்தவிதமான பிரயோசனமும் இல்லை.

அதனாற்றான் ஔவையார் 'அறஞ் செய விரும்பு' என்று அழகாகக் கூறி யுள்ளார். 'தர்மம் தலைகாக்கும். தக்க சமயத்தில் அது உயிர் காக்கும்" என்று ஆன்றோர் கூறியது எவ்வளவு உண்மை பாருங்கள். அது போலவே 'அறஞ்செய விரும்பு' என்பதிலும் ஆழ்ந்த கருத்து மறைமுகமாக அங்கே பொதிந்திருக்கின்றது. வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தது எதற்காக? எம்மால் தர்மஞ்செய்ய முடியாவிட்டால் வாயினாலே வாழ்த்தி அனுப்பலாம். வலது கை கொடுப்பதை இடதுகை அறியக்கூடாது என்று சும்மாவா சொல்லியிருக்கின்றார்கள்.

"ஏ மனிதகுலமே! சிந்தித்துப் பார். தனக்கு மிஞ்சித்தான் தானம். நீ உழைப் பது நூறு ரூபாவாக இருந்தால், அதிலே இரண்டு ரூபாவைத் தானம் செய். மீதியை நீ வைத்துக்கொள். அதைவிட்டு எதுவுமே செய்யாமல் கருமியாக வாழாதே! சில பேர் சொல்லுவார்களே, "அவன் எச்சிக் கையாலே காகம் துரத்த மாட்டான்" என்று. ஏன் அப்படிச் சொல்ல வேண்டும். "அவன் ஒன்றுமே கொடுக்கமாட்டான்" என்பதை நாசூக்காக இப்படிச் சொல்லியிருக்கின்றார்கள். சாப்பிட்ட கையாலே காகந்துரத்தும் போது அந்தக் கைவிரல்களில் ஒட்டியிருக்கும் சில சோற்றுப் பருக்கைகள் கூட எங்கே பறந்து போய் அந்தக் காகத்துக்கு இரையாகி விடுமோ என்கிற கெட்டகுணம் அவனுக்கு. ஆகவே, நாங்கள் அறஞ் செய்யும் போது உள்ளத்தால், விரும்பி முழுமன மகிழ்ச்சியோடு கொடுக்கவேண்டும். அதுதான் அறம். அதுவே தர்மம். "தர்மம் தலைகாக்கும்; தக்க சமயத்தில் உயிர் காக்கும்" இதை மறக்கக்கூடாது.

எச்சரிக்கப்படுவதைவிட எச்சரிக்கை செய்வதே மேல்

தர்மம் செய்வதனால் எமது உள்ளம் மகிழ்ச்சியடைவது மட்டுமல்லாது அதைப் பெறுகின்றவரது உள்ளமும் களிப்படைகின்றது. ஆகவே தர்மம் செய்வது மிகவும் புண்ணிய கைங்கரியமாகும். கர்ண மகாராஜன் இல்லையெனாது கொடுத்து வாரிவழங்கி "கொடைக்குக் கர்ணன்" என்னும் புகழ்மிக்க பெயரைத் தட்டிக் கொண்டான்.

இந்த அறத்தில் இன்னுமொரு விடயமும் அடங்கியிருக்கின்றது. அது என்ன வென்றால், தானதர்மஞ் செய்யும் போது அது சரியான இடத்துக்குத்தான் போகின்றதா? என்பதையும் கவனத்திற்கொள்ள வேண்டும். "பாத்திரமறிந்து பிச்சையிடு! கோத்திர மறிந்து பெண்ணைக் கொடு" என்பது நம்முன்னோர் வாக்காகும்.

கேட்டவுடனே தூக்கிக் கொடுத்துவிடலாகாது. கேட்பவர் உண்மையில் இல்லாதவர் தானா? அல்லது தமது வீண்செலவுகளுக்காக இதனைப் பயன்படுத்த எண்ணுகின்றாரா? சிந்தித்துச் செயற்பட வேண்டும். இதனாலேதான் ஒளவையார் "அறம் செய விரும்பு" என்று மிக அழகாகச் சொல்லியிருக்கிறார் திருவள்ளுவர் கூட தமது திருக்குறளிலே 'அறத்துப்பால்" என்று ஒரு பெரும் பிரிவையே ஏற்படுத்தி இருக்கின்றார்.

'அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும் இழுக்கா இயன்றது அறம்' என்பது வான்புகழ் வள்ளுவரின் வாக்கு. அதாவது பொறாமை, பேராசை, கோபம், வன்சொல் என்ற நான்கும் இல்லாமல் செய்வது தான் அறம். 'ஏசி' இடலின் இடாமை நன்று' என்பது முதுமொழி.

இந்த வகையில் :

நாம் ஆர அமர நன்கு ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங் கும். மனித வாழ்க்கையில் நாம் செய்கின்ற பாவ புண்ணியமே எமது அடுத்த பிற விக்கும் தொடர்ந்து வரும். ஒரு மனிதன் செய்யவேண்டியது அறம். செய்யத்தகாதது பழி பாவம். மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் இதனை நன்கு சிந்திக்க வேண்டும்.

மனநிறைவோடு எந்தவிதமான கோபமோ வெறுப்போ கடுமையோ காட்டாமல் எவன் ஒருவன் தர்மஞ் செய்கின்றானோ அதுதான் உண்மையான தர்மமாகின்றது. அவன் செய்கின்ற இந்த அறமானது அவனது பூவுலக வாழ்வில் அவனுக்குச் சீருஞ் சிறப்பும் கொடுக்கும் அளவிறந்த செல்வத்தையும் அள்ளிக் கொடுக்கும். இந்த அறம் மட்டுமே இதனைச் செய்யும். வேறு எதுவுமே இதனை அளிக்காது.

மனிதன் முதலில் மனிதனாக வாழப் பழக வேண்டும். மனித உருவில் இருந்துகொண்டு மிருகமாக வாழ்தல் கூடவே கூடாது. எம்மால் இயன்றவரை தான தர்மஞ் செய்து வாழ்தலே சிறப்பானது. "இவ்வுலகில் நாம் மாத்திரம் வாழ்ந்தால் போதும்; மற்றவர்கள் எப்படிப் போனாலும் பரவாயில்லை" என்று நினைக்கக் கூடாது. "நாமும் வாழ வேண்டும்; பிறரும் வாழ வேண்டும்" என்றே நினைத்தல் வேண்டும். அதுவே சிறப்பைத் தரும். எனவே அறத்தை முழு மனதுடன் விரும்பிச் செய்து நல்வாழ்வுக்கு நம்மை நாமே தயார்ப்படுத்திக் கொள்வோமாக.

உ

# திருமுனிவனின் தமிழ் மந்திரம் [கட்டுரைத் தொடர் - 39]

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்-

நடராஜமூர்த்தியின் ஆனந்தக் கூத்திலேதான் உலகின் தோற்றமும், இயக்கமும், மறைவும் எல்லாம் நடைபெறுகின்றன. எல்லாமாக நூற்றெட்டுத் திருக்கூத்துக்கள் உள்ளதாகச் சிவாகமங்கள் கூறுகின்றன. மகுடாகமம் கூறும் ஆனந்தத் தாண்டவம் நடராஜ வடிவமே ஆகும். திருக்கூத்தானது ஓங்கார பஞ்சாட்சர மந்திரங்களின் வியாக்கியானமாக உள்ளது. நடராஜரின் திரு உருவம் பஞ்சகிருத்தியச் செயற்பாடுகளை விளக்குவதாக அமைந்துள்ளது. உடுக்கு ஏந்திய கை படைத்தலையும், அபயகரம் காத்தலையும், தீ ஏந்திய கை அழித்தலையும், முயலகன் மீது ஊன்றிய திருவடி மறைத்தலையும், தூக்கிய திருவடி அருளலையும். இதனைத் திருவதிகை மனவாசகம் கடந்தாரின் உண்மை விளக்கப் பாடல் தெளிவாக விளக்குகிறது.

**தோற்றம் துடியதனில் தோயும் திதி அமைப்பில்**
**சாற்றியிடும் அங்கியிலே அங்காரம் - ஊற்றமாய்**
**ஊன்று மலர்ப்பதத்தே உற்றதிரோ தம்முத்தி**
**நான்ற மலர்ப் பதத்தே நாடு**

பஞ்சாட்சர மந்திரம் திரோதான சத்தி, மலம், ஆன்மா, சுத்த அருட்சத்தி, சிவம் ஆகிய ஐந்தின் இலக்கணங்களையும் குறிக்கும் கூத்தாகவும் உள்ளது. இந்த ஐவகைத் திருக்கூத்துக்களையும் சிவானந்தக் கூத்து, சுந்தரக் கூத்து, பொற்பதிக் கூத்து, பொற்றில்லைக்கூத்து, அற்புதக் கூத்து எனத் திருமந்திரம் விளக்குகிறது.

சிவனின் திருமேனியாகிய சிவசக்தி சொரூபமே எல்லா இடமும் நிறைந்திருக்கிறது. சிதம்பரம் இறைவன் ஓயாது நடனமாடிக் கொண்டிருக்கும் இடம். இருதய ஸ்தானம் என்றும் கூறுவர். திருக்கூத்துத் தரிசனம் என்பதற்கு அழகிய திருநடனக் காட்சி என்பதே பொருளாகும்.

ஞானத் திரு உருவாகவும், சோதி ஒளி வடிவாகவும் உள்ள சிவப் பரம்பொருள் அருள் விளையாட்டாக ஐந்தொழிலும் புரிவது போல உலக இயக்கம் ஒழுங்குற நடைபெறுவதற்காக ஐவகைக் கூத்தினை நிகழ்த்துகின்றார். சிவானந்தத்தைச் சீவன்களுக்கு அருளும் சிவானந்தக் கூத்து, பிரணவ ஒளியில் விளங்கும் அழகியல் கூத்தாகிய சுந்தரக் கூத்து, சிரசின் மேல் சித்தாகாசத்தில் பொன் ஒளியில் விளங்கும் பொற்பதிக் கூத்து, பொன்னம்பலமாகிய தில்லையிலே ஆடும் பொற்றில்லைக் கூத்து,

ஆருயிர்கள் எல்லாம் கண்டு களித்து இன்புற ஆடும் ஆனந்தக் கூத்து ஆகிய ஐவகைக் கூத்தினை ஆடுகின்றார். இவ் ஐந்தும் அறிவு, ஆற்றல், அன்பு, ஆற்றல் கூடுதல், அறிவு கூடுதல் என்பவற்றால் நிகழும் நிகழ்ச்சிகளாகும். இப்படியாக மன்றிலும், மனதிலும், வெளியிலும், ஒளியிலும், உயிரிலும் கலந்து நடனமிடும் கூத்தனாகிய சிவப் பரம்பொருளின் அளப்பரிய ஆற்றலை அறிந்துரை யாரால் இயலும் எனத் திருமூலர் குறிப்பிடுகின்றார்.

சிற்பரஞ்சோதி சிவானந்தக் கூத்தனைச்
பொற்பதமாம் அந்த சுந்தரக் கூத்தனைப்
பொற்பதிக் கூத்தனை பொன் தில்லைக் கூத்தனை
அற்புதக் கூத்தனை யார் அறிவாரே.

கூத்து என்பது ஆடற்கலையைக் குறிக்கும் பழைய தமிழ்ச் சொல். நடனம் ஆடும் ஆண்களைக் கூத்தன் என்றும், நடனம் ஆடும் பெண்களைக் கூத்தி என்றும் அழைப்பது மரபாகும். ஆடவல்லானுக்கு நடராஜன், நிருத்தியாதிபன், தாண்டவக் கோன் எனப் பல பெயர்கள் கூறப்படுகிறது. நடனக் கலையின் தோற்றத்திற்கு மூலவராகிய நடராஜன் ஆடும் கூத்தே சிவானந்தக் கூத்து ஆகும். சிவனல்லாத மற்றும் தெய்வங்கள் சந்தர்ப்பம் கருதிச் சில வேளைகளில் மட்டும் ஆடும் கோலத்தில் காணப் படுகின்றன. ஆனால் நடராஜன் ஆடும் சிவானந்தக் கூத்து எக்காலத்திலும் ஓயாது நிகழ்வதாகும். சிவானந்தக் கூத்து இல்லாவிட்டால் உலகமே இயங்காது. அசையாது. எத்தொழிலும் நடக்காது.

நடராஜனின் ஆனந்தக் கூத்தின் பொருளை அறிவது தான் ஞானம். இந்த ஞானம் கிடைப்பதற்கும் இறைவனுடைய அருள் வேண்டும். எல்லாமே தெய்வ லீலை, எல்லாமே ஆனந்தமயம் என்பது தான் சைவர்களின் கொள்கை எல்லையில்லாத பேரின்பம், தெவிட்டாத பெருமகிழ்ச்சி என்பதே ஆனந்தம் என்பதன் பொருள். சிவப்பரம் பொருள் திரு நடனமிடும் இடம் ஆனந்த மயமானது. ஆடும் நடனத்திற்கு ஏற்ப பாடும் பாடல்களும் போற்றும் துதிகளும் கூடப் பரமானந்தமானவை. பாட்டிற்கும் நடனத்திற்கும் ஏற்ப இசைக்கப்படும் இசைக் கருவிகளும் வாத்தியங்களும் கூட இன்ப ஆனந்தம் அளிப்பவை. இப்படியாக எல்லாம் இன்ப மயமாக இருக்கும்போது அவனைச் சுற்றியுள்ள அசையும் அசையாப் பொருள்கள் யாவும் இன்ப வடிவினதாகவே உள்ளன. ஆடவல்லானுக்கு எல்லாம் ஆனந்தம், பரமானந்தமாகவே காட்சி தரும்.

ஆனந்தம் ஆடரங்கு ஆனந்தம் பாடல்கள்
ஆனந்தம் பல் இயம், ஆனந்தம் வாச்சியம்

**ஆனந்தம் ஆக ஆகிய சராசரம்**
**ஆனந்தம் ஆனந்தக் கூத்துகந்தானுக்கே**

அகத்திலே இறைவனைத் தரிசனம் செய்யும் நெறியே ஞான மார்க்கம். சீவனுக்குள்ளே சிவமணம் பூத்திருக்கும் நிலை ஞான நிலை. பிரமத்தை அறிந்தவன் பிரமமாகிறான் (பிரம்மவித் பிரமைவ பவதி) என்பது கீதா வாக்கியம். ஞானத் தீ எல்லா வினைகளையும் பொசுக்கிவிடும். ஞான சாதனை செய்யும் போது பொய்யறி வாகிய அஞ்ஞானம் ஆதவனைக் கண்ட பனி போல அகன்று விடும். ஆன்மா மெய்யறிவு பெற்று நிற்கும் நிலையை சிவத்தோடு சேர்ந்திருக்கும் நிலையாகும். சிவமாம் தன்மை பெற்ற ஆன்மா சிவத்தை அன்றிப் பிறிதொன்றையும் காணாது. அது தன்னையும் சத்தாகிய சிவமாகவே காணும். ஆன்மா சிவத்தோடு கலந்து அனுபவிக்கும் இன்பமே பேரின்பமாகும்.

யானையை அடக்க உதவும் அங்குசத்தைப் போல மனித மனங்களை தீமை வழிச் செல்லாது தடுத்து சன்மார்க்கமாகிய சிவநெறியிற் செல்ல உதவுவது சிவஞான மாகும். இந்த ஞானம் கைவரப் பெற்றவர்களுக்கு மனம் ஒரு முகப்பட்டுக் குவிந்து காணப்படும். இந்நிலையில் சங்கரனாகிய சிவன் நடு நாடியினுள் அறிவினுள் தங்கி 'தொம்தீம்' எனத் தாளமிசைத்து திருக்கூத்தாடுவான். இக்காலம் திருவருள் பொங்கும் காலமாகும். "மனம் அடங்கினால் முத்தி" என்பதே சித்த புருஷரின் வாக்கும் ஆகும். சிவன் சுழுமுனை உச்சியில் பொங்கி எழுந்து அருள் சுரக்கும் காலத்தில் மனம் அடங்கும்.

**அங்குசம் என்ன எழுமார்க்கம் போதத்தில்**
**தங்கிய தொந்தி எனும் தாள ஒத்தினில்**
**சங்கரன் மூல நாடிக்குள் தரித்து ஆடல்**
**பொங்கிய காலம் புகும் போகல் இல்லையே**

அகோரம், வாமதேவம், தற்புருடம், சத்தியோசாதம், ஈசானம் என்னும் ஐந்து திருமுகங்களைக் கொண்டு விளங்கும் சதாசிவ மூர்த்தம் உருவமாகவும், அருவமாக வும், அரு உருவமாகவும் காட்சி தருகிறது. சிவனின் திருவருளால் அவனின் திரு வடிப் பேறு பெற்றுச் சிவானந்தம் கிடைத்தவர்கள் சிவனடியார்கள் ஆவார்கள். இவர் களே இறைவன் பொன்னம்பலத்தில் ஆடும் திருநடனம் கண்டு களிக்கும் பேற்றினைப் பெற்றவர்கள்.

இந்திரியங்களின் இச்சை வயப்பட்டு அலையும் ஆசை வயப்பட்ட மனம் உடைய என்னை அடங்கி நிற்குமாறு செய்து குருவடிவம் தாங்கி நந்தியெம்பெருமான்

தனது திருவடிகளை என் தலைமேல் வைத்து ஆட்கொண்டான். பரிபூரண ஞானத்தை நடன உருவில் காட்டும் மூர்த்தியாகிய நடராஜப் பெருமான் பேரானந்தப் பேறு நாம் அடையும் இடத்தினை நமக்குக் காட்டி அருள் செய்தான். சித்திரம் போலச் சித்தமானது அசைவற்று நிற்கும் வண்ணம் என் உள்ளத்தில் வந்து அமர்ந்து தன் கருணையை ஐம்புலன்களிலும் வியாபிக்கச் செய்து பேரின்ப நடனம் புரிந்து ஆட்கொண்டார்.

**அடங்காத என்னை அடக்கி அடிவைத்து**
**இடங்காண பரானந்தத்தே என்னை இட்டு**
**நடத்தான் செயும் நந்தி ஞானக் கூத்தன்**
**படந்தான் செய்து உள்ளுள் படிந்திருந்தானே**

நிலத் தொடர்பின்றி நாற்புறமும் கடல் சூழ இருப்பதுதான் நமது தாய் நாடாகிய ஈழமணித் திருநாடு. இதனைச் சிவபூமி என்கிறார் திருமூலர். யோகக் கலையை ஆதாரமாகக் கொண்டு இதனை விளக்குகிறார். உலகில் உயர்ந்து விளங்கும் மேருமலைபோல உடம்பில் நடுநாடி உள்ளது. நடு நாடியின் இரு பக்கமாக இடகலை, பிங்கலை நாடிகள் விளங்குகின்றன. பூமியோ தொடர்பற்றுத் தனியாகக் கடல் நீர் சூழ் இலங்கைத் தீவு காணப்படுகிறது. இதேபோல இடகலை, பிங்கலை ஆகிய இரு நாடிகளும் இதயமாகிய தில்லை வனத்தை வளைத்து உச்சித் தலையில் சென்று சுழுமுனையில் கூடுகிறது. இதயமாக தில்லைச் சிதம்பரமும் சிரசாக இலங்கையும் சுட்டப்படுகிறது. இதயமும் தலையும் சிவபூமியாகும். இதயத்தில் இறவைனை நினைத்து வழிபடுவது கிரியை நெறி. உச்சித்தலையில் வைத்துப் பரம் பொருளை வழிபடுவது ஞானமார்க்கம். சிவபூமியில் இறைவனை வைத்து வழிபட்டால் சிரசின் மேல் நட்சத்திரங்கள் போன்ற ஒளி தோன்றும்.

**மேரு நடுநாடி மிக்க இடை, பிங்கலை**
**கூரும் இவ்வானின், இலங்கைக் குறி உறும்**
**சாரும் திலை வனம் தண்மாமலயத்து ஊடு**
**ஏறும் சுழுமுனை இவை சிவபூமியே**

சிவனுக்கு ஐந்து முகங்கள் உண்டு. அதோ முகம் சக்திக்கு உரியது. ஐம்முகச் சிவன் அதோ முகத்தை உடைய சக்தியுடன் இணைந்து ஆறுமுகச் செவ்வேளாக உலகம் உய்யத் தோன்றினார் என்றே கந்தபுராணம் கூறுகிறது. ஆறுமுகங்களை உடைய கந்தவேட் பெருமானை ஞானபண்டிதன் என முருக உபாசகர்கள் அழைப்பார்கள். சிவனுக்கு பிரணவ மந்திரத்தின் உட்பொருளை விளக்கியதால் சுவாமிநாதன் என்றும் முருகப் பெருமான் அழைக்கப்படுகின்றார்.

"நாதா குமரா நம என்று அரனார்
ஓதாய் என ஓதியது எப்பொருள் தான்"

என அருணகிரிநாதர் முருகப் பெருமானிடம் வேண்டுவதைக் கந்தரநுபூதியிலே காணலாம்.

ஆத்ம சொரூபம் அகத்திலே பிரகாசிக்கும் சாதகர்கள் ஐந்து முகத்தோடு அதோ முகத்தையும் சேர்த்து ஆறுமுகத்தோடு கூடிய குருபரன் என்பதை அறிந்தனர் .சிவ சிந்தனையில் பொருந்திய தவ யோகிகள் தெளிந்து அறிந்த நிலையில் தென் தில்லைச் சிற்றம்பலம் வேறு, மெய் அடியார்களின் உள்ளம் வேறல்ல என்பதை அறிந்தனர்.

ஆறு முகத்தில் அதிபதி நான் என்றும்
கூறு சமயக் குருபரன் நான் என்றும்
தேறினர் தெற்குத் திருவம்பலத்துளே
வேறு இன்றி அண்ணல் விளங்கி நின்றானே

சிவனடியார்களும் சிவனும் வேறுபட்டவை அல்ல என்பதே சைவ சித்தாந்தத்தின் முடிவும் ஆகும்.

"மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே"

என்றே சிவஞானபோதமும் குறிப்பிடுகிறது. வார்த்தைகளால் கூற முடியாத பரவச நிலையை அடையச் செய்வது அற்புதக் கூத்து. உலகில் உள்ள அசையும் அசையாப் பொருள்கள் அனைத்துமே இறைவன் திருநடனம் ஆடும் அரங்கமாகும். முப்புரம் எரித்தபோது இறைவன் ஆடிய கூத்து பாண்டுரங்கம் எனப்படும்.

புளியைப் பார்த்தால் சிலருக்கு வாயில் உமிழ் நீர் ஊறும். இதேபோல இறைவனின் ஆனந்த நடனத்தைக் கண்டவர்களுக்கெல்லாம் கண்களில் ஆனந்த அருவி நீர் சொரியும். இன்ப அன்பில் உள்ளம் திளைத்து உருகும். உள்ளத்துள்ளே ஒளியாகத் தோன்றும் இறையருள் ஆனந்தமாக அமுத ஊற்றாகப் பெருக்கெடுக்கும். தில்லைக் கூத்தனின் அற்புதக் கூத்தினைக் கண்டவர்கள் பேரின்பப் பெரு வாழ்வினைப் பெறுவார்கள்.

புளிக் கண்டவர்க்குப் புனல் ஊறுமா போல்
களிக்கும் திருக்கூத்துக் கண்டவர்க்கெல்லாம்
துளிக்கும் அருட் கண்ணீர் சோர் நெஞ்சு உருக்கும்
ஒளிக்குள் ஆனந்தத்து அமுது ஊறும் உள்ளத்தே

உ




# அழுதால் பெறலாம்

சீர்காழி என்ற ஊரில் சிவபாத இருதயர் என்னும் அந்தணர் வாழ்ந்து வந்தார். அவருக்கு பகவதியார் என்னும் கற்புக்கரசி மனைவியாகத் திகழ்ந்தார்.

சிவபாத இருதயர் சிவ வேள்விகள் செய்தும், வேத மந்திரங்கள் ஓதியும் இந்த உலகம் நன்மைகள் அடைய திருத்தொண்டு புரிந்து வந்தார்.

பகவதியார் சிவன்பாலே சிந்தை செய்து ஒழுக்க நெறியுடன் சிவபாத இருதயரோடு இல்லற மேன்மையால் தாய்மைப் பேறு பெற்றார்.

முருகக் கடவுளைப் போன்ற அழகான குழந்தை பிறக்க, அனைவரும் வாழ்த்தி ஆளுடைய பிள்ளை என்று பெயரிட்டு வளர்த்து வந்தனர்.

தெய்வீக அருளால் குழந்தை இறையுணர்வுடன் வளர்ந்து வந்தது. மேலும் ஒளி பொருந்தித் திகழ, அருகில் உள்ளோர் அன்பு பாராட்டி ஆளுடைய பிள்ளையைப் போற்றினார்.

அதன் மழலைப் பேச்சுக்கள் கூட பக்தி வெளிப்பாடாகவும் பண்பு நெறியாகவுமே இருந்தன.

நல்ல சொற்களைக் கூறியபடியும் நடைவண்டி தள்ளி நடைபயின்றும் அறிவான விளையாட்டுக்கள் விளையாடியும் ஆளுடைய பிள்ளைக்கு மூன்று வயது நெருங்கும் பருவம் வந்தது.

ஒருநாள் சிவபாத இருதயர் தனது வழக்கம்போல் தோணியப்பர் இருக்கும் திருக்கோயிலுக்கு வழிபாடு செய்யச் செல்லத் துவங்கினார்.

அப்பொழுது ஆளுடைய பிள்ளையும் உடன் வரவேண்டும் என்று அழவே தன்னுடன் குழந்தையையும் அழைத்துச் சென்றார் சிவபாத இருதயர்.

கோயிலுக்குச் செல்லும்பொழுது அத் திருக்கோயிலிலுள்ள குளத்தில் குளித்துவிட்டுச் செல்வது உடலுக்கும் உள்ளத்திற்கும் நல்லது என்பதனை அறிந்த சிவபாத இருதயர் தனது குழந்தையை குளக்கரையில் அமரச் செய்துவிட்டு தண்ணீரில் நீராடச் சென்றார்.

வெகுநேரம் ஆகியும் தனது தந்தையைக் காணாததால் ஆளுடைய பிள்ளை, "அம்மா - அப்பா" என்று குரல் எழுப்பி கோயில் முழுவதும் கேட்கும்

வண்ணம் அழத் துவங்கினான்.

குழந்தையின் அழுகை அக் கோயிலில் உள்ள சிவபெருமானுக்கும் பார்வதி தேவிக்கும் கேட்டது.

இருவரும் மனமிரங்கி குழந்தை யின் அழுகையை நிறுத்தி மகிழ்ச்சி அடைந்திட கருவறையில் இருந்து வெளிப் பட்டு வந்தனர்.

"பாவம் குழந்தை பசியால் அழு கிறது. உமையே, உனது அமுதப்பாலை பொற்கிண்ணத்தில் கறந்து தாயுள்ளத் தோடு அந்த ஞான மகனுக்கு நம் இறை சம்பந்தம் உண்டாக ஊட்டுவாயாக" என்று கட்டளையிட்டார்.

இறைவனின் கட்டளைக்குப் பணிந்து பார்வதியார் அவ்வாறு பால் ஊட்ட குழந்தையான ஆளுடையபிள்ளை தனது அழுகையை நிறுத்தி புன்னகை புரியத் துவங்கியதும் வந்த சிவனும் பார்வதியும் மறைந்து சென்றனர்.

சிவபாத இருதயர் குளித்து முடித்து விட்டுக் கரையேறி வந்தார். அப்பொழுது தனது மகனின் வாயில் பால் வடிந்து இருப்பதைக் கண்டு யார் கொடுத்த பாலை இவன் அருந்தினானோ தெரியவில்லையே என்று வருந்தினார்.

முன்பின் தெரியாமல் பிறர் கொடுக் கும் பொருளை வாங்கக் கூடாது என்று எத்தனை முறை கூறி இருக்கிறேன். இப் பொழுது யார் கொடுத்த எச்சிற்பாலை உண்டாய் என்று குளத்தின் அருகாமை யில் இருந்து ஓர் செடியில் பிடுங்கிய கொம்பால் அடிக்கச் சென்றார்.

"காதுகளிலே கம்மல் என்ற அணி கலனை உடையவன், காளை மாட்டின் மீது ஏறி வருபவன், வெண்மை பொருந் திய நிலாவின் ஒரு பகுதியான பிறையை தலையில் வைத்தவன்.

"காட்டிலே கிடைகின்ற சாம்பலை உடலில் பூசியவன்; எனது மனதைத் திருடிக் கொண்டவன்; கையில் வேத ஏட்டுக்களுடன், தாமரை இதழ்களின் மீது அமர்ந்த பிரம்மதேவன் வழிபட அருள் புரிந்தவன். "அப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்ட இந்த ஊரிலே வாழ்கின்ற பெரு மான் அதோ காட்சியளிக்கின்றானே பாருங் கள்" என்று இசைநயம் ததும்ப தோடு டைய செவியன் எனும் பாடலைப் பாடிக் காட்டி மேலும் அடையாளங்கள் கூற ஆரம் பித்தான்.

குழந்தையின் தெளிவான விளக்க மும், ஞானமும் கண்ட சிவபாத இருதயர் தெய்வமே வந்து இந்தக் குழந்தைக்கு ஞானத்தை பாலாக அளித்து அருள் புரிந்து இருக்கின்றது என்பதை அறிந்தார்.

நாளெல்லாம் சிவ வேள்வியும் பூஜையும் புரிந்து நமது கண்களால் காணமுடியாத இறைவனை தனது குழந்தை கண்டு இருக்கிறானே, இத னால்தான் குழந்தையும் தெய்வமும் ஒன்று என்று சொல்கிறார்களோ என்று எண்ணினார்.

ஆளுடைய பிள்ளையை "ஞான சம்பந்தர்" என்றழைத்து தனது தோள் களின் மீது ஏற்றி பெருமையுடன் வீட் டிற்கு அழைத்துச் சென்று நடந்ததைக் கூறி அனைவரையும் அதிசயம் அடை யச் செய்தார்.

ஞானசம்பந்தர் மேலும் பல அதி சயங்கள் விளங்கச் செய்து சிவத்தொண்டு புரிந்து புவியெங்கும்சிவனின் புகழைப் பாடலானார்.

உ

திருவாசக ஆராய்ச்சியுரை தொடர்ச்சி



# சிவபுராணம்

- சங்க நூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் -

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கு மாரியனே
நேச வருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா வமுதே யளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கு மொளியானே
நீரா யுருக்கியென் னாருயிராய் நின்றானே

*பதவுரை:* மாசு அற்ற சோதி மலர்ந்த மலர் சுடரே - களங்கம் இல்லாத ஒளிவிரிந்த மலரின் ஒளிபோன்றவனே, தேசனே - குரு முதல்வனே, தேன் ஆர் அமுதே - இனிமை நிறைந்த அமுதம் போன்றவனே, சிவபுரனே - சிவபுரத்தையுடையவனே, பாசம் ஆம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே - ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்களின் பிடிப்பினைக் கெடுத்து மெய்யறிவினை வளர்க்கும் மேலோனே, நேச அருள் புரிந்து - நின்பால் அன்பு செய்தற்கேதுவாகிய திருவருளைச் செய்து, நெஞ்சில் வஞ்சம் கெட - என் மனத்தின்கணுள்ள பொய்ம்மையாகிய குற்றம்கெட, பேராது நின்ற பெரும் கருணை பேர் ஆறே - என் மனத்தின் கண் நீங்காமல் நிலைபெற்ற பெருங்கருணையாகிய பெரிய யாறாகவுள்ளவனே, ஆரா அமுதே - தெவிட்டாத அமுதம் போன்றவனே, அளவு இலா பெம்மானே - எல்லை இல்லாத இயல்பினையுடைய பெருமானே, ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே - நின்னை ஆராயதாவர் உள்ளத்தின் கண்வெளிப்படாது மறையும் ஒளிப் பொருளாயுள்ளவனே, நீராய் உருக்கி என் ஆர் உயிராய் நின்றானே - என் மனத்தை நீர் போல் உருகச் செய்து என் அரிய உயிர்க்கு உயிராய் நின்றவனே.

உலகத்து ஒளிகள் போலல்லாது களங்கமின்றி என்றும் ஒருபடித்தாக இருக்கும்

ஒளிவிரிந்த மலரொன்று உளதாயின் அம்மலரின் ஒளிபோலும் ஒளியையுடையான் இறைவனாதலின் 'மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே' என்றார். "யாவராயினு மன்பரன்றி யறியொணா மலர்ச்சோதியான்" (அருட் 1) என அடிகள் பிறிதோரிடத்து அருளியமையுங் காண்க.

தேசு - ஒளியாயினும், 'சோதிமலர்ந்த மலர்ச்சுடரே' (62) என இறைவன் ஒளிவடிவு கூறப்பட்டமையின் தேசன் என்பதற்கு ஈண்டு ஞான ஒளியையுடைய குரு என்பது பொருளாயிற்று.

சிவபுரம் - சிவலோகம். மேலேழுலகங்களின் மேலேயுள்ள சத்தியலோகம் பிரமாவுடையதாக, அதற்குமேலே வைகுண்டலோகம் விஷ்ணுவுடையதாக, அதற்குமேலே சிவலோகம் சிவனுடையதாக நூல்கள் கூறும். அச்சிவலோகமே ஈண்டுச் 'சிவபுரம்' எனப்பட்டது.

பாசம் - ஆணவம் கன்மம் மாயை என்னும் மும்மலங்கள். "பசுக்களைக் கட்டிய பாச மூன்றுண்டு" என்றார் திருமந்திரத்தும் (2367). இறைவன் பாசமாம் பற்றறுத்தமையை,

"பாரிடைப் பாதங்கள் காட்டிப் பாசமறுத்தெனை யாண்ட" குயில் 9

"பாசமானவை பற்றுத் துயர்ந்ததன் பரம்பெருங் கருணையால்
ஆசைதீர்த் தடியாரிடைக் கூட்டிய வற்புத மறியேனே" அற்புத 8.

என அடிகள் அருளியவாற்றானுமறிக. பாரிக்கும் - வளர்க்கும். "பகலென்னும் பண்பின்மை பாரிக்கு நோய்" (குறள் 851) என்புழி, பாரிக்கும் என்பதற்கு வளர்க்கும் எனப் பரிமேலழகர் பொருளுரைத்தமையுங் காண்க. மும்மலங்களின் பற்றைக் கெடுத்து உயிர்கட்கு மெய்யறிவினை வளரச் செய்தலாற் 'பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியன்' என்று அருளிச் செய்தார். ஆரியன் - மேலோன்; வடசொல்.

நேசம் - அன்பு. நேச அருள் - உயிர்கள் தன்பால் நேசம் செய்வதற்கேது வாகிய திருவருள். "அவனருளாலே யவன்றாள் வணங்கி" (சிவபுரா18) என வருதலுங் காண்க. வஞ்சம் - பொய். "நின்வாய்மைக்கட் பெரியதோர் வஞ்சமாய்க் கிடவாதோ" (கலி 135 : 10-11) என்புழியும் இப்பொருட்டாதல் காண்க.

பெயராது என்பது பேராது எனத் திரிந்தது. "பேராவிடும்பை தரும்" (குறள்892) என்புழியும் இவ்வாறு வருதல் காண்க. ஆராவமுதே - தெவிட்டாத அமுது போன்றவனே.

"ஆராவமுதமுமானார்தாமே (தே. நாவு 250:5) எனவும்,

"அப்பனை நந்தியை ஆரா வமுதினை" (திருமந். 36) எனவும் வருவன காண்க.

இறைவன் இயல்புகள் அளவுபடாதனவாதலின் 'அளவிலாப் பெம்மான்' என்றார். பெருமான் என்பது பெம்மான் என நின்றது.

ஓர்தல் - ஆராய்ந்தறிதல். ஓராதார். தம்மியல்பினையும் தம்மையுடைய தலைவன் இயல்பினையும் ஆராய்ந்து அறியாதவர். ஓராதார் உள்ளம் அறியாமையாற் பற்றப்பட்டு இருண்டு கிடத்தலின், எங்குமுள்ள இறைவன் அவருள்ளத்து இருப்பினும் விறகிற்றீப்போல் மறைந்திருப்பானாகலின், 'ஓராதாருள்ளத் தொளிக்கு மொளியானே'' என்றார். ''ஓராதார் உள்ளத்தில்லார் தாமே, உள்ஊறு மன்பர்தம் மனத்தார் தாமே'' (திருநாவு 250:8) எனத் தேவாரத்தும் வருதல் காண்க.

ஆருயிராய் நின்றானே என்றது எனது உயிர்க்குயிராய் நின்று இயக்குபவனே என்றவாறு. ''உயிர்க்குயிரா யங்கங்கே நின்றான்''. ''எல்லா வுயிர்கட்கும் உயிரா யுளன்'' (ஞான 132 : 4; 377:3) எனத் தேவாரத்து வருவனவுங் காண்க.

# அபயம் தந்து காத்திட ஆற்றங்கரையில் தேரேறு

**எழிலான சந்நிதிக் கந்தனே!**

**இந்நாட்டு மக்களுக்கு வழிகாட்ட தேரேறு!**

**பொழிலான மயிலேறி பழியோட்ட**

**புதுவாழ்வை நிலைநாட்ட தேரேறு!**

**தமிழான கடவுளே அருள்கேட்டு**

**தாள்களைப் பணிகிறோம் தேரேறு!**

**அருளான கந்தனே அபயம் தர**

**ஆற்றங்கரையிலே எமைக்காக்க தேரேறு**

**மதுரகவி. காரை. எம்.பி. அருளானந்தன்**

# "சேரமான் பெருமாள் நாயனார்"

## உலாப் பாடிய வரலாறு



- வாரியார் சுவாமிகள் -

மாலைநாட்டிலே மகோதை என்னும் பெயரை உடைய கொடுங்கோளூரிலே, சேரர் குடியிலே, பெருமாக்கோதை யார் என்னும் சற்புத்திரர் ஒருவர் தோன்றினார். அவர் இளமை யிலேயே வைராக்கியமுற்று சிவபக்தி மிகுந்து, இராஜ கருமத்தை வெறுத்து, திருவஞ்சைக் களத்திலேயே திருவாலயத் தொண்டினை அன்புடன் செய்து வரலாயினார்.

அக் காலத்தில் செங்கோற்பொறையன் என்னும் சேர மகாராஜன் துறவறத்தை மேற்கொண்டு தவவனம் அடைந்தான். மந்திரிமார்கள் திருவஞ்சைக் களம் போந்து, பெருமாக்கோதையாரை வணங்கி அரசராகும்படி வேண்ட, அவர் சிவாக்ஞை மேற்கொண்டு உயிர்கள் பற்றி அறியும் அறிவையும், அழிவில்லாத ஆற்றலையும், பெருங் கொடையையும், பற்பல படைகளையும், பக்தி நெறி வழுவாமல் அரசியற்றும் ஆண்மையையும் சிவபெருமான்பால் பெற்று, வணங்கி விடைபெற்று, நல்ல சுபதினத்திலே முடிசூடி, சிவாலயத்தை வணங்கி, யானை மீதூர்ந்து வெண்கொற்றக் குடை நிழற்ற, வெண்சாமரம் வீச சகல விருதுகளு டனும் பவனி வந்தார். வரும்போது ஒரு வண்ணான் உவர் மண்ணைச் சுமந்து வர, மழையினாலே கரைந்த உவர்மண் அவ்வண்ணான் உடம்பில் வீபூதிபோல் தோன்ற, அதுகண்ட பெருமாக் கோதையார் என்னும் சேரமான் பெருமாள், உடனே யானையினின்றும் இறங்கி விரைந்துபோய் வணங்கினார். அதுகண்டு வண்ணான் நடுநடுங்கி அவரை வணங்கி, "அண்ணலே! அடியேன் அடிவண்ணான்" என்று சொல்ல, சேரமான் பெருமாளும், "தேவரீர் திருநீற்று வடிவத்தை நினைப்பித்தீர்; அடியேன் அடிச்சேரன். வருந்தாதீர், போம்!" என்று சொல்லியருளினார்.

அவருடைய அடியார் பக்தியைக்கண்ட மந்திரிமார்கள் முதலியோர் மிகவும் இறும்பூதுற்று இறைஞ்சினார்கள். சேரமான் பெருமாள் நாயனார் நாள்தோறும் செய்யும் பூசை முடிவிலே நடராஜப் பெருமானுடைய சிலம்பொலி கேட்கும். சிவபெரு மான் கொடுத்தனுப்பிய திருமுகப் பாசுரத்தை சென்னிமேற்கொண்டு வணங்கி, அத்திருமுகங் கொண்டுவந்த பாணபத்திரருக்கு அளப்பில்லாத அரதனங்களை நல்கி உபசரித்தார்.

ஒருநாள் பூஜை முடிவிலே, சபாநாதருடைய சிலம்பொலி கேளாதொழிய, சேரமான் நாயனார் மனமயங்கி, "அடியேன் யாதுபிழை செய்தேனோ? இனி இந்த உடம்பை ஒழிப்பேன்" என்று வாள் கொண்டு உயிர்விடத் துணிந்தனர்.

உடனே சபாநாயகர் சிலம்பொலி கேட்கச் செய்து, "அன்பனே! சுந்தரமூர்த்தியின் பாடலைக் கேட்டுவரத் தாமதித்தோம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பெருமையை வெளிப்படுத்தினார். சேரமான் பெருமாள் நாயனார் சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பெருமையையும் அவர் அருட்பாடலின் அருமையையும், கனகசபாபதி அடியார்க்கருளும் கருணையின் திறத்தையும் நினைந்து நினைந்து நெஞ்சம் நெகிழ்ந்திருந்தார். சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தரிசிக்கும் ஆவல் கொண்டு, திருவாரூர் போந்து, வன்றொண்டரை வணங்கி, வன்மீகநாதர் மீது மும்மணிக் கோவையையும், சபாநாதர் மீது பொன்வண்ணத்தந்தாதியும், வேதாரணியர் மீது திருவந்தாதியையும் பாடி வழிபட்டார்.

பல நாட்களுக்குப் பின் சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தம்முடைய கொடுங்கோளூருக்கு அழைத்துச் சென்று மிகவும் உபசரித்து அவருடன் மிக்கதோர் நட்புக் கொண்டு தமது பண்டாரத்திலிருந்த செல்வமுழுவதையுங் கொடுத்து ஆரூருக்கு அனுப்பி, என்றும் அவரை மறவாது அரசு செய்து வந்தார். பின்னர் ஒரு சமயம் அந்திவண்ணனைத் தூதுகொண்ட சுந்தரமூர்த்தி நாயனார் கொடுங்கோளூருக்கு வந்து சேரமான் பெருமாள் நாயனாருடன் எழுந்தருளியிருந்தார். பல நாளாயின. பின் சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக் களம் சென்று சுவாமி தரிசனம் செய்து கொண்டிருந்தபோது, திருக்கைலாயத்தினின்றும் சிவபெருமானால் அனுப்பப்பட்ட வெள்ளை யானைமேல் ஏறி, "இந்திரன், மால், பிரமன், எழிலார் மிகு தேவர் எல்லோரும் வந்து எதிர்கொள்ளச் செல்லும் போது, தனது அருமைத் தோழராகிய சேரமான் பெருமாள் நாயனாரை நினைத்தார். நீராடிக் கொண்டிருந்த சேரமான் பெருமாள் நாயனர், தம்பிரான் தோழருடைய நினைவையுணர்ந்து, உடனே அருகிலே நின்ற குதிரை மீதேறி, திருவஞ்சைக்களம் சென்று, ஐராவதமூர்ந்து ஆகாயத்திற் செல்லும் ஆரூரடிகளைக் கண்டு, தாம் ஏறிய குதிரையின் செவியிலே ஐந்தெழுத்தை ஓதியருளினார். உடனே அக்குதிரை ஆகாயத்திற் பாய்ந்து, நம்பியாரூரருடைய வெள்ளை யானையையடைந்து, அதனை வலஞ் செய்து அதற்கு முன்னாகச் சென்றது.

சேரமான் பெருமாள் நாயனாரும், சுந்தரமூர்த்தி நாயனாரும் உள்ளுவார் வினையகற்றும் வெள்ளியம் பொருப்பை நண்ணியவுடனே குதிரையினின்றும் யானையினின்றும் இறங்கி பல வாயில்களையுங் கடந்து திருவணுக்கன் திருவாயிலை அடைந்தார்கள். அங்கே சேரமான் பெருமாள் நாயனார் தடைப்பட்டு நிற்க, சுந்தரமூர்த்தி நாயனார் உள்ளே போய் சிவசந்நிதியில் விழுந்து வணங்கி எழுந்து துதித்து நின்று, "எந்தையே! தேவரீருடைய திருவடிகளை அடையும் பொருட்டுச் சேரர்கோன் திருவணுக்கன் திருவாயிலையடைந்து நிற்கின்றார்" என்று விண்ணப்பஞ் செய்தார். புரிசடைக் கடவுள் புன்முறுவல் செய்து சேரமான் பெருமாளை அழைப்பிக்க, அவர் ஆராத அன்புடன் விரைந்துசென்று பன்முறை விழுந்து வணங்கித் துதித்து நின்றார். செம்மேனிப் பெம்மான் திருமுறுவல் கொண்டு, "இங்கே நாம்

உன்னை அழையாதிருக்க, நீ வந்தது என்னை?' என்று அருளிச் செய்ய, சேர மான் பெருமாள் நாயனார் கைகூப்பி, "பண்ணுவர் போற்றுங் கண்ணுதற் கடவுளே! சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவடிகளைத் துதித்து, அவர் ஏறிய வெள்ளை யானைக்கு முன் அவரைச் சேவித்துக் கொண்டு வந்தேன்; தேவரீர் பொழிகின்ற பெருங்கருணை வெள்ளம் அடியேனை இங்கு கொண்டு வந்து ஒதுக்கியதால் திருமுன் வரப்பெற்றேன்; மலைமகள் நாயக! இனி ஒரு விண்ணப்பம் உண்டு; மாலயனாதி வானவர்களாலும், மாதவர்களாலும், மறைகளாலும் துதிக்கப்படுதற்கு அரிய பெருமையுடைய தேவரீர் மீது அன்பினாலே தேவரீரது திருவருள் துணை கொண்டு திருவுலாப் பாடினேன்; அதனைத் தேவரீர் திருச்செவி சாய்த்தருள வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். அப்பொழுது சிவபெருமான், "சேரனே! அதனைச் சொல்லு" என்று திருவாய் மலர்ந்தருளினார். சேரமான் பெருமாள் நாய னார் உடனே திருக்கைலாய ஞானவுலாவை ஆசுகவியாகப் பாடிப் பெருமானைக் கேட்க வைத்தார். அரனார் மகிழ்ந்து, "நம்முடைய கணங்களுக்கு நாதனாய் இரு" என்று அருள் புரிந்தார். சேரமான் பெருமாள் நாயனார் சிவகணராகிச் சிவமூர்த்தியைச் சேவிப்பாராயினர். அவர் அருளிச் செய்த ஞானவுலாவை அங்கு அன்று கேட்ட மகாசாத்தர், தமிழ் நாட்டிலுள்ள திருப்பிடவூரிலே அதனைக் கொணர்ந்து வெளியிட்டு உலகில் விளங்க நாட்டியருளினார்.

---


**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

காசுக்கட்டளை
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
T.P.No. 021-2263406
021 3219599

காசோலை
செ. மோகனதாஸ்
க. இல. 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

www. sannithiyan. org


ஐ

க.பொ.த. (உயர்தர) மாணவரின் மேலதிக வாசிப்பிற்குரியது

# திருவாவடுதுறை ஆதீனம்

ச.லவீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை

திருவாவடுதுறை ஆதீனம் தமிழகத்தின் தென்பகுதியில் நாகை மாவட்டத்தில் திருவாவடுதுறைச் சிவன்கோவிலை அடுத்துத் தென்பகுதியில் அமைந்துள்ளது. சைவ ஆதீனங்களில் பழமை வாய்ந்ததும் மூதன்மை வாய்ந்ததும் இதுவேயாகும். திருவாவடுதுறைக்கு நவகோடிசித்தர்புரம் என்று ஒரு பெயரும் உண்டு. ஒன்பது சித்தர்கள் இவ்வூரின் ஒன்பது திசைகளில் வாழ்ந்தார்களாம். அதனால் இப்பெயர் ஏற்பட்டிருக்கிறது.



திருவாவடுதுறை ஆதீனம் குருநமசிவாயதேசிகரால் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோற்றுவிக்கப்பட்டது. திருக்கயிலையில் சீகண்ட தேவரால் மெய்யுணர்த்தப்பெற்ற திருநந்தி தேவரின் ஞானமரபில் வந்த மெய்கண்ட தேவாின் வழித்தோன்றல் என ஆதீன நிறுவனர் போற்றப்படுகின்றார். அதனால் இவ்வாதீன ஞானாசிரியர் மரபினை திருக்கயிலாய ஞானபரம்பரை எனச் சிறப்பாகக் குறிப்பிடுவர்.

இவ்வாதீனக் குருபீடத்தில் அமர்ந்திருக்கும் ஞானாசிரியரைப் பண்டாரம் அல்லது பண்டாரசந்நிதி என வழங்கும் பழக்கம் முன்பு காணப்பட்டது. ஆனால்

பிற்காலத்தில் பரமாச்சாரிய சுவாமிகள் என வழங்கும் பழக்கம் ஏற்பட்டது. முதலாவது ஞானாசிரியர் (பண்டாரம்) நமசிவாய தேசிகர். இரண்டாவது ஞானாசிரியர் அம்பலவாண தேசிகர். இவர்களை நினைவு கூரும் வகையில் பெரிய பட்டத்தில் எழுந்தருளி இருப்பவர் தாம் அனுப்பும் கடிதங்களில் நமசிவாயம் துணை எனவும் சின்னப்பட்டத்தில் எழுந்தருளி இருப்பவர் அம்பலவாணர் துணை எனவும் எழுதும் வழக்கம் இன்றும் உள்ளது. பெரிய பட்டத்தில் இருப்பவரை நமசிவாய தேசிகர் எனவும் சின்னப்பட்டத்தில் இருப்பவரை அம்பலவாணத் தம்பிரான் எனவும் குறிக்கும் மரபும் காணப்படுகின்றது.

இவ்வாதீனத்திற்கு தமிழகம் எங்கணும் ஆங்காங்கே கிளை மடங்களும் உள்ளன. சமுதாய வாழ்வுக்குச் சமயம் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் எனபதை உணர்ந்த இவ்வாதீன முதல்வர்கள் சமூகப்பணிகளுக்கு முன்னுரிமை வழங்கிச் செயற்படுகின்றனர். முன் வேலப்ப தேசிகர், பின் வேலப்ப தேசிகர் போன்ற பண்டார சந்நிதிகள் மக்களுக்கு உண்டான குஷ்டம் போன்ற நோய்களைத் தமது அருளாற்றலால் குணப்படுத்தினர்.

சைவசித்தாந்தத்தின் முதன்மை நூலாக விளங்கும் மெய்கண்டாரின் சிவஞானபோத நூலுக்கும் அதன் வழிவந்த பிறநூல்களுக்கும் பண்டாரசந்நிதிகள் பலர் தமது அறிவாற்றல், அனுபவம் என்பவற்றின் துணையோடு விளக்கவுரைகளை வழங்கியுள்ளனர். இவற்றுள் 11 ஆம் பட்டம் பின் வேலப்ப தேசிகர் காலத்தில் வெளியிடப்பட்ட சிவஞானமுனிவர் செய்தருளிய "சிவஞான மாபாடியம்" என்ற சிவஞான போதப் பேருரையும் அதன் சிற்றுரையும் இன்றும் போற்றப்படுகின்ற சிறப்புக்குரிய நூல்களாகும். இதைவிட மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, தமிழ்த்தாத்தா உ..வே.சாமிநாதையர், சேற்றூர்க் கவிராயர், நம்நாட்டவர்களான சபாபதி நாவலர் (கோப்பாய்), ஆறுமுகநாவலர் (நல்லூர்) முதலிய தமிழ்வல்ல அறிஞர்களின் பங்களிப்புடன் பல நூல்கள் ஆதீனத்தாரால் வெளியிடப்பட்டன.

இவ்வாதீனத்தில் **சரஸ்வதி மஹால்** என்ற நூலகம் உண்டு. இங்கு அரிதில் கிடைக்கும் நூல்கள், பழைமையான ஓலைச் சுவடிகள் முதலியன இன்றும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இன்றுவரை முந்நூறுக்கும் அதிகமான நூல்களை வெளியிட்டும் மறுபதிப்புச் செய்தும் திருத்தப் பதிப்புச் செய்தும் இவ்வாதீனம் வெளியிட்டுள்ளது. திருக்குறள் மூலபாடம் முதற்பதிப்பை 1812 இல் அச்சிட்டு வெளியிட்ட பெருமை இவ்வாதீனத்தாரையே சாரும். இவ்வாதீனத்தின் சென்னைக்

கிளை மடத்தில் தொண்டாற்றிய அம்பலவாணத் தம்பிரான் சுவாமிகளே இப் பணியை மேற்கொண்டார்.

ஆதீன நூலகத்தில் உள்ள ஓலைப்பிரதிகள் செப்பேடுகள், கை எழுத்துப் படிகள் முதலியன தக்க ஆராய்ச்சியாளரைக் கொண்டு ஆராயப் பட்டுள்ளன. சில பிரதிகள் தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தாரால் நுண்பட வாக்கம் (Micro Film) செய்யப்பட்டும் உள்ளன. திருக்கழுக்குன்றத்தில் வருடந்தோறும் இசைவிழா நடாத்தப்பட்டு தம்புரா பரிசளிக்கும் நிகழ்வும் இடம் பெறுகின்றது. "மெய்கண்டார்" என்ற சமய இலக்கிய மாத இதழ் இவ்வாதீனத்தாரால் வெளியிடப்படுகின்றது. படிப்பைத் தொடரும் மாணவருக்குப் பொருளுதவி, நூல்களுதவி எனப் பல உதவிகள் வழங்கப்படுகின்றன. ஒடுக்கப்பட்ட மக்களின் கல்வி வசதிகள் திருமண நிகழ்வுகள் போன்றவற்றிற்கும் ஆதீனத்தாரால் உதவிகள் வழங்கப்படுகின்றன. எட்டுக்கும் மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் காலை மதிய உணவு வழங்கப்பட்டு இலவசக் கல்வி வழங்கப் படுகின்றது. இதைவிட இலவச தட்டச்சு, கணினி பயிற்சி நிறுவனங்களும் நடாத் தப்படுகின்றன. கலைவல்லுநர், நற்றிறம் படைத்த சான்றோருக்கு விருதுகள் வழங்கி அவர்தம் பணியை ஊக்குவிக்கும் செயற்பாடுகளும் இடம்பெறுகின்றன. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பலர் இவ்வகையில் விருதுகள் வழங்கி ஊக்குவிக்கப் பட்டுள்ளனர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

நம்மவரான நல்லூர் ஆறுமுகனாருக்கு நாவலர் என்ற பட்டத்தை வழங்கிச் சிறப்பித்ததும் திருவாவடுதுறை ஆதீனமேயாகும்.

# புரட்டாதி மாத குருபூசை தினங்கள்

**21.09.2010 புரட்டாதி 5 செவ்வாய்** – நரசிங்முனையரையா குருபூசை
**26.09.2010 புரட்டாதி 10 ஞாயிறு** – உருத்திரபசுபதியார் குருபூசை
**29.09.2010 புரட்டாதி 13 புதன்** – திருநாளைப் போவார் குருபூசை
**05.10.2010 ஐப்பசி 19 செவ்வாய்** – அருணந்தி சிவாச்சாரியார் குருபூசை

உ

# செய்திச் சிதறல்கள்

- திருவாவடுதுறை ஆதீனம் ஆன்மார்த்த மூர்த்தி அருள்மிகு ஞான மாநடராசப் பெருமானின் ஆவணி திருநீராட்டுவிழா, பீடாரோகண வெள்ளி விழா, மணி விழா 23.08.2010 திங்கட்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது.
- கொழும்புத்துறை உப்புக்குளம் நரசிம்ம வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் 30.08.2010 திங்கட்கிழமை முற்பகல் 11.05 மணி தொடக்கம் நண்பகல் 12.28 மணிவரை உள்ள சுபநேரத்தில் இடம் பெற்றது.
- அனலைதீவு தெற்கு சக்காதி கலட்டி அருள்மிகு ஸ்ரீ சங்கரநாதர் முருக மூர்த்தி திருக்கோவில் மஹாகும்பாபிஷேகப் பெருவிழா 30.08.2010 திங்கட்கிழமை பிரதிஷ்ட பிரதம குரு பிரம்மஸ்ரீ பா.வை. தியாகராஜக் குருக்களின் தலைமையில் நடைபெற்றது.
- வட்டுக்கோட்டை அராலி மேற்கு கோட்டக்காடு நொச்சியம்பதி அருள் மிகு ஸ்ரீ சித்திவிநாயகர் திருக்கோயில் மகோற்சவம் 30.08.2010 முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 08.09.2010 தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளது.
- 2010ஆம் ஆண்டு நல்லூர் திருவிழாவை முன்னிட்டு கலியுகவரதன் இந்து மன்றத்தால் வருடந்தோறும் நடாத்தப்பட்டு வரும் தேர்த்திருவிழா அன்னதான நிகழ்வு 07.09.2010ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.
- பூநகரி முழங்காவில் கிருஷ்ணாநகர் வெங்கடேஸ்வரப் பெருமாள் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 01.09.2010 புதன்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற உள்ளது.



உ

(தொடர்ச்சி...

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கிக் கொண்டிருப்பவன் தமிழ்க் கடவுளாம் முருகன் என்றே கூற வேண்டும். அவ்வகையில் கதிர்காமத்தில் காவடிக் கந்தனாக வும், மாவிட்டபுரத்தில் அபிஷேகக் கந்தனாகவும், நல்லூரில் அலங்காரக் கந்தனாகவும் செல்வச் சந்நிதியில் அன்ன தானக் கந்தனாகவும் வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டு இருக்கின்றான். முருகப் பெருமான் செல்வச்சந்நிதியில் இருந்து அருள் புரிந்து கொண்டு இருப்பது மற்ற முருகன் ஆலயங் களிலும் பார்க்க வித்தியாசமானது. சந்நிதி ஆல யத்தை ஒரு வைத்தியசாலை ஆகவும் அங்கே வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கும் சந்நிதியானை நோய் தீர்க்கும் ஒரு வைத்தியனாக

# சந்நிதியான்

திரு. ந. அரிரத்தினம் அவர்கள்



கருதி அவனை வழிபடும் அடியவர்களை நாம் இன்றும் காணலாம். அவ்வழிபாட்டிற்கு காரணமாக அமைவது ஆலயத்தைச் சூழவுள்ள தீர்த்தமும் ஆலய பூசகர்களால் காலங்காலமாக அறுபத்து நாலு ஆலம் இலையில் முருகனுக்கு படைக்கப்படும் பிரசாதத்தை மருந்தாக சந்நிதியானை வழிபட வரும் அடியவருக்கு வழங்குவதும் தான். அத்துடன் ஆலயத்தைச் சூழவுள்ள மடங்களில் நடைபெறும் அன்னதானச் செயற்பாடும் ஒரு முக்கிய காரணமாக அமைந்துள்ளது. தீர்க்க முடியாத நோய், பிணி உள்ளவர்கள் இச்செயற்பாட்டினை மேற்கொண்டு சந்நிதியானை வணங்கி அவனருள் மூலம் பூரண சுகமடைகின்றார்கள்.

இவ்வகைச் செயற்பாட்டினை நன்கு உணர்ந்து கொண்ட சந்நிதியான் ஆச்சிரம சுவாமி அவர்களும் ஆலயத்துக்கு வந்து முருகப் பெருமானை வணங்கிவிட்டு ஆச்சிரமத்தில் வந்து அங்கே நடைபெறும் அன்னதானத்தில் கலந்துகொள்ளும் அடியவர்களுக்கு,

**"இங்கு நடைபெறுவது வெறும் அன்னதானமல்ல. இது சந்நிதியானுடைய மருந்து. இங்கு வேண்டாத ஒன்றும் இல்லை. எல்லாம் எல்லோருக்கும் ஒத்துக் கொள்ளும். ஒரு விக்கினமும் செய்யாது"** என்று கூறுவதை நாம் கேட்டிருக்கின்றோம். இக் கூற்றின் அடிப்படையில் ஆச்சிரமத்தில் கலந்துகொள்ளும் முருகனடியார்களும் வாழை இலையில் இடப்படும் அனைத்துப் பதார்த்தங்களையும் பயபக்தி உடன் உண்பதை யாரும் காணலாம்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி வேற்பெருமானது உற்சவம் ஆலயத்தில் இடம் பெற்று வரும் வேளையில் சந்நிதியான் ஆச்சிரமத்தின் செயற்பாட்டினை நாம் உற்று நோக்குவோமானால் சந்நிதியானது அருளாட்சி ஆச்சிரமத்திலும் அங்கே இடம்பெறும் சகல செயற்பாட்டிலும் வியாபித்திருப்பதை கண்கூடாகக் காணலாம். அவ்வகையில் வருடம் 365 நாட்களும் நடைபெற்றுவரும் நித்திய அன்னப்பணி, கடந்த பத்து வருடமாக வாரத்தில் இருநாட்கள் நடைபெறும் இலவச வைத்திய சேவை, வாராந்த வெள்ளி நிகழ்வு, 13 ஆவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் மாதாந்த ஞானச்சுடர் மலர் வெளியீடு, ஆலயத்தை தஞ்சமென நம்பிவந்து தங்கி இருக்கும் முதியோரைப் பராமரித்து அவர்கட்குரிய சகல வசதிகளையும் செய்து கொடுத்தல், போன்ற செயற்பாடுகளுடன் வாழ்வாதாரமற்ற ஏதிலிகளை இனம் கண்டு அவர்களது வாழ்க்கைத் தரம் உயர ஊன்று கோலாகவும் வறிய மாணவர்களின் கல்வி செயற்பாடுகளுக்கு ஆதரவளித்தும், பலவிதமான சமூக சமயப் பணிகளை ஆற்றி வருகின்றது.

இவ்வகைச் செயற்பாட்டிற்கு பெருமளவு நிதி தேவை. ஆனால், ஆச்சிரமச் சுவாமி அவர்கள் இவற்றைப் பற்றி சிறிதளவேனும் சிந்திப்பதில்லை. இவை எல்லாம் சந்நிதியானது வேலை. அவன் இட்ட பணி இங்கே நடைபெறுகின்றது. அச்செயற்பாட்டிற்குரிய முழுப் பொறுப்பும் சந்நிதி வேலவன் தான். நான் எனக்கிட்ட கட்டளைப்படி நடக்கின்றேன் என்று சுவாமி அவர்கள் அடிக்கடி கூறுவார்.

ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வகைச் செயற்பாட்டிற்கு சுவாமி அவர்கள் ஒருவரையும் நாடுவதில்லை. ஆச்சிரமத்தில் இடம் பெறும் செயல்கள் எல்லாம் சந்நிதியானது வேலை. யாரும் விரும்பிக் கொண்டு வந்து கொடுத்தால் அதனை சுவாமிகள் பெற்றுக் கொள்வார்கள்.

இதனடிப்படையில்தான் ஆச்சிரம செயற்பாடு இடம்பெற்று வருகின்றது. அத்தனைக்கும் சந்நிதி வேலவனும், நித்திய அன்னப்பணிக்கு ஆதரவு நல்கும் முருகனடியார்களும். அவர்களும் ஆச்சிரமத்தில் இடம்பெறும் தூய்மையான செயற்பாட்டினை நன்கு விளங்கி மனம் கோணாவகையில் தங்களது ஆதரவினை வழங்கி ஆச்சிரமச் செயற்பாட்டிற்கு ஊன்று கோலாக விளங்குகின்றார்கள். இதனை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்திற்கும், ஆச்சிரமத்திற்கும் வருகை தரும் முருகன் அடியவர்கள் கண் கூடாகக் காணலாம். இவை எல்லாம் சந்நிதியான் செயல். இவற்றுடன் நாமும் இணைந்து கொள்வோம்.

ஓம் முருகா!

---



ஸ்ரீமத் முத்துக் குமாரு மயில்வாகனம் சுவாமி அவர்களின் 25ஆவது குருபூசைத் தின நிகழ்வு 15.08.2010 ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகளோடு பக்தி பூர்வமாக இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் சுவாமி அவர்களை நினைவு கூரும் வகையில் "குருவாய் வருவாய்" எனும் பொருளில் க. ஆனந்தராசா (அன்னைதாசன்) அவர்கள் சொற்பொழிவு ஆற்றினார்கள்.

அதனைத் தொடர்ந்து அறுபத்து மூவர் குருபூசையும் இடம்பெற்றது.

உ

தமிழகத் திருக்கோயில் வரிசை: தொடர்ச்சி...

# குமார வயலூர்
# ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில்

- வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்-

திருச்சிராப்பள்ளி நகரிலிருந்து உறையூர், சீனிவாசநகர், உய்யகொண்டான் வழியாக 12 கி.மீ. தூரத்தில் குமாரவயலூர் திருக்கோயில் அமைந்துள்ளது. திருச்சி மத்திய பேருந்து நிலையத்திலிருந்து இடைக்கிடையேயும், திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து உறையூர் ஊடாக அடிக்கடியும் பேருந்து சேவை உண்டு. வயலூருக்குச் செல்லும் வழியில் வளைந்து வளைந்து செல்லும் உய்யகொண்டான் வாய்க்காலிலிருந்து எப்பொழுதும் பெருகிவரும் நீரின் மிகுதியினால், "வயலூர்" எனும் பெயருக்கு ஏற்றபடி வயலும் - வாழை மரங்களும் - தென்னந்தோப்புகளும் - கரும்புத் தோட்டங்களும் சூழ்ந்த ஒரு அழகிய கிராமியச் சூழலில் "வயலூரான்" வந்தமர்ந்துள்ளான்.

இத்திருத்தலம் வயலூர், குமார வயலூர், அக்னீஸ்வரம் என்றெல்லாம் அழைக் கப்படுகிறது. குன்று இருக்குமிடமெல்லாம் குமரன் இருப்பான். குறிஞ்சி நிலக் கடவுளான ஆறுமுகப்பெருமான் மருத நிலமான வயலூர் பகுதியில் கோயில் கொண் டிருப்பது தனிச் சிறப்பேயாகும். சோழவளநாடு உறையூரைத் தலைநகராகக் கொண்டு பெரும் புகழ் படைத்திருந்த காலத்தில் இக்கோயில் தோன்றியதாக வரலாற்று நூல் கூறுகிறது. வாழைத் தோப்புகளையும் கருப்பஞ் சோலைகளையும் தாண்டி, அண்மைக்கால திருமண மண்டபங்கள் - கட்டிடங்கள் கடந்து வயலூரான் வாசலில் உள்ள சிறிய நான்கு கால் மண்டபத்தில் நின்றபடி பார்வையைச் செலுத்து கிறோம்.

கிழக்குப் பார்த்த கோயிலின், நிறைந்த சிற்ப வேலைப்பாடுகளுடன் கூடிய 5 நிலைக் கோபுரம் உட்புறமாக இருக்கவே, வெளிப்புறமாகக் கட்டப்பட்டுள்ள சிறிய கோபுரம் கண்ணெதிரே தெரிகிறது. வழமையான கோபுர அமைப்பிலிருந்து சற்று வேறுபட்டதாக - 3 நிலைகளுடன் - கீழ்த்தளத்தில் முருகன் வள்ளியைக் கரம் பிடிக்கும் காட்சியும், நடுத்தளத்தில் வேலும் மயிலும் அருகிருக்க, வள்ளி - தெய்வானை உடனிருக்க, அருணகிரி அருகிருக்கும் காட்சியும், மேற்தளத்தில் தேவியருடன் முருகனுமாக சீமெந்தினாலான சிற்பங்கள் அழகிய வர்ணத்தில் ஜொலிக்கிறது.

கோபுரத்தையும், மூலவரையும் கைகூப்பி வணங்கிக் கொண்டு அப்படியே வலப்புறம் திரும்பிப் பார்த்தால், திருமுருக கிருபானந்த சுவாமிகள் பெயருடனான "கந்தசஷ்டி மண்டபம்" மாடிக் கட்டிடமாக எழுந்து நிற்பதைப் பார்க்கிறோம். மண்டப வாசலுள்ளே, நெற்றி நிறைந்த திருநீறு - உருத்திராக்கம் மாலை - தோளில் சிவப்பு நிற அங்கவஸ்திரத்துடன் தலையைச் சற்றே சாய்த்தபடி நிறைந்த புன்சிரிப்போடு, 4 அடி உயர பீடத்தில் வாரியார் அமர்ந்துள்ளார். இப் போது, யான் கிழக்குத் திசையில் பார்க்கிறேன். என் வலது கைப்புற மூலையில் (தென் கிழக்கு மூலை) காணப்படும் குளம் "சக்தி தீர்த்தம்" எனப்படுகிறது. வேலவன் தன் கைவேலினால் சக்தி தீர்த்தத்தை உண்டாக்கி பூசை செய்ததாக ஸ்தல வரலாறு கூறுகிறது. குளத்துக்கு வடக்காக சக்தி தீர்த்தமருகே, ஒரு மரத் தடியில் வயலூர்க் கிராம மக்களின் கிராம தேவதைக் கோயிலான இடும்பன் கோயில் காணப்படுகிறது. கோயில் முகப்பில் சிறியதும் பெரியதுமாக (ஆறு அடிவரை) இருப்பினாலான வேல்கள் - சூலாயுதங்கள் காணப்படுகின்றன. தங்கள் வேண்டுதலை நிறைவேற்றித் தந்த முருகனுக்கு நன்றிக் கடன் செலுத்தவேண்டி இந்த வேல்களைச் செய்து இடும்பன் கோயில் வாசலிலே பதிக்கிறார்கள்.

சிறிய முன் கோபுரம் தாண்டி, இரு பக்கமும் விசாலமான - பரந்த - நீண்ட மண்டபம் உள்ள பகுதிக்கு வருகிறோம். எமக்கு இடப்புறமுள்ள மண்ட பத்தின் ஒரு ஓரத்தில் ஸ்தலவிருட்சமான பட்டுப்போன வன்னிமரத்தின் அடிப்பகு தியை மிகக் கவனமாகப் பாதுகாத்து வருகிறார்கள். ஸ்தல விருட்சமான புதிய வன்னி மரம் உட்பிரகாரத்தில் உள்ளது. அந்த நீண்ட மண்டபத்தின் மேற்குப் புறமுடிவில் சந்நிதானத்தின் அலுவலகம் இருக்கிறது. சகல கோயில் நிர்வாகக் கருமங்களும் இங்கேயே நடைபெறுகிறது. வலது பக்கம் உள்ள நீண்ட மண்ட பத்தின் இறுதியில் (மேற்கே - கோபுரவாசலை அண்மித்தபடி) கோயிற் பிரசாதங்கள் விற்பனை செய்யப்படுகின்ற "விற்பனைப் பகுதி" உண்டு. இரு பக்கமுமுள்ள இந்த நீண்ட மண்டபங்களிலேயும், உட்பிரகாரத்தின் தென்மேற்கு மூலையிலும் திருமணங்கள் நடைபெறுகின்றன. திருமணத்திற்கான நல்ல நாளில் இந்த மூன்று இடங்களிலும் இருபதுக்கும் மேற்பட்ட திருமணங்கள் நடைபெறுவதை யாம் கண் ணாரக் கண்டிருக்கிறோம். பிரதான கோபுர வாசலின் இடது பக்கம் (கிழக்குப் பார்த்தபடி) அனைவரதும் கவனத்தைக் கவரும்படியாக, வாரியார் சுவாமிகளின் புன்முறுவல் பூத்த திருவுருவை வர்ண ஓவியமாக்கி வைத்துள்ளார்கள். ஏறக்குறைய 43 ஆண்டு காலம் "முருகா! முருகா!!" என வாக்கினாலும், மனத்தினாலும், தன் சொற்பொழிவின் வருவாயினாலும் வயலூரானுக்குத் தொண்டாற்றிய வாரியார் சுவாமிகளை கண்களில் நீர் கசியப் பார்த்து வணங்குகிறோம்.

தமிழ் நாட்டில் மட்டு மல்ல, தமிழ் கூறு நல்லுலகம் அனைத்தும் சென்று, "கைத் தலம் நிறை கனி..." என்று தொடங்கி, ......... "வயலூரான் திருவடிகளை வணங்கி சொற்பொழிவினை ஆரம்பிக்கிறேன்....." என தனது வெண்கலக் குரலினால்

மக்களைக் கட்டிப் போட்டவர் வாரியார். எங்கிருந்தாலும் கந்தசஷ்டிப் பெருவிழாவின் ஆறு நாட்களும் வயலூரிலேயே தனது தொடர் சொற்பொழிவினை ஆற்றுவதைத் தன் வாழ் நாளின் பிறவிப்பயனாகக் கருதியவர் வாரியார். அவரது பேச்சும் மூச்சும் எப்பொழுதும் முருகன் பற்றியதும், அருணகிரிநாதரின் திருப்புகழ் பற்றியது மாக இருந்ததை. அன்று நேரடியாகவும் இன்று இறுவட்டுக்களிலும் கேட்கும் அன்பர்களுக்கு நன்கு புரியும். அதனாலன்றோ அன்னாரின் நல்ல ஆத்மா இந்த மண்ணிலல்லாது ஆகாயத்திலேயே (விமானப் பயண வேளையில் விமானத்தி லேயே) பிரிந்து அறுமுகத்தண்ணல் திருப்பாதங்களைச் சென்றடைந்தது.

பிரதான கோபுர வாசல் தாண்டி உள்ளே வந்ததும் நேராக உள்ள கொடி மரம் - நந்தி - பலிபீடம் கடந்து உள்ளே கருவறைப்பகுதிக்கு வந்தால் லிங்க வடிவில் **"ஆதிநாதரின்"** அற்புதத் தோற்றம்கண்டு மெய்சிலிர்த்து நிற்கிறோம். அவரே குமாரவயலூரின் மூலமூர்த்தி. முச்சுடரின் மூலநாயகன் ஆதலின் **"அக்னீஸ்வரன்"** என்றும், தேவர்களின் தலைவன் ஆதலின் **"மகாதேவன்"** என்றும், தன்னை அண்டி வந்தவர்களை மறக்காமல் காத்தருள்வதால் **"மறப்பிலிநாதர்"** என்றும் பல பெயர்களால் அழைக்கப்படுகிறார் இந்த **"ஆதிநாதர்"**. ஆதிநாதர் சந்நிதியில் உள்ள நடராஜரின் உற்சவ மூர்த்தம் மற்றைய ஸ்தலங்களிற் காணப்படுவதைப் போலன்றி சற்று மாறுபட்ட நிலையில், திருவாசி இல்லாமல் இரு பாதங்களையும் பீடத்தில் ஊன்றியபடி **"சுந்தர தாண்டவம்"** ஆடும் கோலத்தில் அமைந்துள்ளது. காலடியில் உள்ள முயலகனுக்குப் பதிலாக தாமரைப் பீடத்தில் நடராஜர் உள் ளார். இறைவன் திருநாமத்தை ஒட்டியே வயலூரில் ஆட்சி புரியும் அன்னை பரா சக்திக்கு **"ஆதிநாயகி"** என்று திருநாமம், ஆதிநாதர் கிழக்கு நோக்கியும், அரு கேயே அம்பிகை தெற்கு நோக்கியும் அமர்ந்துள்ளனர்.

வலஞ்சுழியாக நாம் உட்பிரகாரத்தை வலம் வந்தால், ஞானகுருபரனான தெட்சணாமூர்த்தி கொலுவமர்ந்துள்ள தெற்கு நோக்கிய சந்நிதானம், எதிரே அழகு தமிழில் திருப்புகழ் பாடிய **அருணகிரிநாதர்** சந்நிதி, இடையே கிழக்குப் பார்த்தபடி **"பொய்யாக் கணபதி"** சந்நிதியும் காணப்படுகின்றன. பொய்யான வாழ்வில் உழலும் மாந்தரை மெய்யான வாழ்வுக்கு வழிகாட்டும் "பொய்யாக் கணபதி" அருகே, தன் திருப்புகழ் பாடல் ஒவ்வொன்றிலும் பொய்யா வாழ்வினை முதற்பகுதியாகவும் - மெய்ஞான வாழ்வினை பிற்பகுதியாகவும் அமைத்துப் பாடிய அருணகிரிநாதர் சந்நிதியை அமைத்துள்ளமை மிகப் பொருந்தமே. "நமது வாழ் விடமான வயலூருக்கு வா" என முருகன் அழைக்க வயலூர் வந்து சேர்ந்த அருணகிரிநாதருக்கு முன்பாகத் தோன்றி மாமயிலின் மீது திருமாமுகம் ஒன்றுடனும் - அழகுமிகு வேலுடனும், மலை நிகர்த்த மார்புடனும், மலர்போன்ற திருவடியுடனும் தோன்றி பிரணவ மந்திரத்தில் விளங்கும் சடாட்சரத்தை உபதேசித்தருளினார் முருகன். "ஓம் எனும் வடிவங்கொண்ட மயிலை, கடம்ப மாலையை, திசையெங்கும் இசைபரப்பும் சேவலை, மலையைப் பிளந்த மாண்புறுவேலை, ஆறிரண்டு தோளை,

# வயலூரும் வாரியாரும்

**(வயலூரின் ஸ்தல வரலாற்றுப் புத்தகத்தில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ள வாரியாரின் பணிகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.)**

- வாரியார் தமது முயற்சி ஒன்றினையே மூலதனமாகக் கொண்டு ஆரம்பித்த ராஜகோபுரத் திருப்பணி 1937இல் நிறைவுபெற்று திருக் குடமுழுக்கு நடைபெற்றது.

- வயலூர் கோயிலை விரிவுபடுத்த எண்ணி மீண்டும் திருப்பணி வேலைகள் தொடங்கியது. ராஜகோபுரத்திற்கு முற்பக்கம் அழ கான இருபக்க மண்டபங்களும் அதன் முன்பாக சிறிய முதற் கோபுரமும் அலுவலகமும் அமைக்கப் பெற்றது. (அன்றைய கால) நான்கு லெட்ச ரூபா செலவில் மேற்படி திருப்பணிகள் வாரியார் தலைமையில் நிறைவேறியது.

- வயலூருக்கு வருகைதரும் பக்தர்கள் தங்கி நின்று வயலூரானை வழிபட வசதியாக விருந்தினர் விடுதிகளும் மண்டபங்களும் வாரியார் தலைமையில் திருப்பணிச் சபையினால் நிறைவேற்றப் பட்டது.

- ஸ்ரீ வள்ளிநாயகி தேவகுஞ்சரி உடனுறை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமிக்கும், ஆதிநாயகி உடனுறை ஆதிநாதர், பொய்யாக் கண பதிக்கும் 1969, யூன் 19ஆம் தேதி வியாழக்கிழமை வாரியார் தலைமையில் திருக்குடமுழுக்கு சிறப்புடன் நிறைவேறியது.

- 3ஆவது முறையாக - திருக்கோயில் விமானங்களும், கோபுரங் களும் பழுதுபார்த்து வர்ணம் தீட்டப்பட்டு, மேற்கூரை முழுவதும் திருத்தியமைக்கப்பட்டு 13.07.1983இல் திருக்குடமுழுக்கு சிறப் பாக நடந்தேறியது.

அடியவர்களுளும் தாளை, இவைகளுடன் வயலூரையும் வைத்துப் பாடு" எனத் திருவாய் மலர்ந்து மறைந்தருளினான் முருகன். " பக்கரை விசித்ரமணி..." என்று தொடங்கும் துதிப்பாடலுடன் "நல்லருள் புரிவாய் விநாயகனே" என பொல்லாப் பிள்ளையாரை வணங்கிப் பாட ஆரம்பிக்கிறார் அருணகிரிநாதர். மடை திறந்த வெள்ளம்போல சந்தத் தமிழோடு அவர் நாவினின்றும் வந்தெய்திய திருப்புகழ் பாடல் பல்லாயிரம். ஆனால் உலகுக்குக் கிடைத்தமை 1311 திருப்புகழ் மட்டுமே. அவற்றுள் வயலூரைப்பற்றி நேரடியாகப் பாடிய திருப்புகழ் 18. இதைவிட ஐம் பதுக்கும் அதிகமான திருப்புகழில், "வயலூர்" - "வயலூரர்" எனப்பாடி வயலூரின் பெருமையை விளக்குகிறார்.

பொய்யாக் கணபதி, அருணகிரிநாதர் சந்நிதிகளை வணங்கி வந்தோ மல்லவா! இப்போது நாம் ஆதிநாதர் அமர்ந்துள்ள கருவறையின் சரி பிற்பக்கம் ஒட்டியுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி சந்நிதிக்குள் வருகிறோம். சிலபடிகள் மேலேறி ஒடுங்கிய பாதை வழியாக வரவேண்டும். பக்தர்களைத் தன்பால் ஈர்க்கும் அழகுத் தோற்றம்; வரம்தரத் துடிக்கும் அதரம்; சுடர்வேல் தாங்கிய கரம்; தெய்வ குஞ்சரி வள்ளியொடு எக்காலத்தும் நீங்காது விளங்கும் வேலவன் வீற்றிருக்கும் காட்சியைக் காணக்கண் கோடி வேண்டும். எவ்வேளையும் நிறைந்த அலங்கார மூர்த்தியாக விளங்கும் சுப்பிரமணிய சுவாமியின் மாமயில் வாகனம் இடப்புறமாக முகத்தை வைத்திருப்பது வயலூரின் ஒரு முக்கிய அம்சம். அடியவர்கள் அனை வரும் தம்மை நெருங்கிவந்து வழிபடவும் - அருகே வைத்து அருள் வழங்கவும் - தான், தன் தந்தையின் பின்னால் வந்தமர்ந்து கொண்டாரோ திருமுருகன். அன்னை யும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பதனை நமக்குப் புகட்ட, தினமும் தாய் தந்தையரின் தாள் வணங்கிப் பூசனை புரிந்து அருள்பெறும் ஆனந்த முருகனாக இங்கே வயலூரில். அங்கே சுவாமிமலையில் தந்தைக்கு உபதேசிக்கும் தனயனாக, லிங்க மூர்த்தம் உள்ள கருவறைக்கு மேலே (60 தமிழ் வருடங்களைக் குறிக்கும் 60 படிகள் ஏறி) கட்டுமலையில் வேலவன் வீற்றிருக்கிறான்.

சந்நிதானத்தின் வடக்காக ஒடுங்கிய படிகளில் கீழிறங்கி மகாலெட்சுமியைத் தரிசிக்கிறோம். மருமகனைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு வேண்டும் அனைத்தை யும் கொடுக்கிறார் இந்த மாமியாரான மகாலெட்சுமி. அருகிலேயே துர்க்கை, சண்டிகேஸ்வரரின் தரிசனம் கிடைக்கிறது. உள்வீதியின் வடக்குப் பக்கச் சுவரில் வயலூர் முருகன் மீது அருணகிரிநாதர் பாடியருளிய 18 திருப்புகழ் பாடலும், கந்த சஷ்டி கவசமும் பளிங்குக் கற்களில் பொறிக்கப்பட்டுள்ளன. அதே சுவரின் ஒரு ஓரத்தில் பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் கீறப்பட்ட பெரிய படம் கண்ணெதிரே தெரிகிறது. எதிரே கருவறையின் தென்சுவரில் பாம்பன் சுவாமிகளின், "குமாரஸ்தவ மந்திரம்" பளிங்குக் கற்களில் பதிக்கப்பட்டுள்ளது. யாகசாலையைக் கடந்துவர வைரவர் சந்நிதியும் - நவக்கிரக சந்நிதியும் வருகிறது. நவக்கிரக சந்நிதியிலும் ஒரு மாறுபாடான அம்சம் தெரிகிறது. நடுவே சூரியபகவான் தன் தேவி

யருடன் அமர்ந்திருக்க, ஏனைய கிரகங்கள் அனைத்தும் சூரியனைப் பார்த்தபடி உள்ளன.

தைப்பூசம், பங்குனி உத்தரம், சித்திரைப் புத்தாண்டு, வைகாசி மாத பிரமோற்சவம், ஆனி மாத மூல நட்சத்திரத்தில் வரும் அருணகிரிநாதர் ஜெயந்தி உற்சவம், ஆவணியில் வரும் விநாயகர் திருவிழா, நவராத்திரி, கார்த்திகைத் தீப நாள், மார்கழித் திருவெம்பாவை என வருடத்தின் எல்லா மாதங்களிலும் வரும் விசேட நாட்களிலும் வயலூரானைத் தரிசிக்க பல்லாயிரம் மக்கள் கூடுவர். நாமும் வயலூரானை வணங்கி வளம் பெறுவோம்.

*என்னால் பிறக்கவும் என்னா லிறக்கவும்*
*என்னால் துதிக்கவும் கண்களாலே*
*என்னா லழைக்கவும் என்னால் நடக்கவும்*
*என்னா லிருக்கவும் பெண்டிர் வீடு*
*என்னால் சுகிக்கவும் என்னால் முசிக்கவும்*
*- என்னால் சலிக்கவும் தொந்த நோயை*
*என்னா லெரிக்கவும் என்னால் நினைக்கவும்*
*என்னால் தரிக்கவும் இங்குநானார்*
*கன்னா ருரித் தஎன் மன்னா எனக்குநல்*
*கர்ணா மிர்தப் பதம் தந்த கோவே*
*கல்லார் மனத்துட னில்லா மனத்தவ*
*கண்ணா டியிற்றடம் கண்டவேலா*
*மன்னான தக்கனை முன்னாள் முடித்தலை*
*வன்வாளி யிற்கொளும் தங்கரூபன்*
*மன்னா குறத்தியின் மன்னா* ***வயற்பதி***
*மன்னா மூவர்க்கொரு தம்பிரானே!"*

**- அருணகிரிநாதரின் வயலூர்த் திருப்புகழ்**

பி.கு. உறையூர் - சீனிவாசநகர் - உய்யகொண்டான் பாலம் தாண்டி வயலூர் நோக்கிச் செல்லும்போது வீதியோரத்தில் வலப்புறமாக "திருகற்குடி" எனும் சிவஸ்தலம் வருகிறது. இயற்கையாகவே சிறிய மலைமீது கோயில் அமைந்திருப்பதனால் அவ்விடம் "உய்யக்கொண்டான் மலை" என்றும், திருக்கோயில் "உய்யக் கொண்டீஸ்வரம்" எனவும் வழங்கப்படுகிறது. சம்பந்தர், சுந்தரர் - இருவராலும் தேவாரப் பாடல் பெற்ற திருத்தலம் இது. வயலூரானைத் தரிசிக்கச் செல்லும் அன்பர்கள் திருகற்குடி ஈசனையும் ஒருமுறை தரிசித்து வரலாமே!.

உ

# புரட்டாதி மாத வாராந்த நிகழ்வுகள்

03.09.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மரணமில்லா பெருவாழ்வு"

வழங்குபவர் :- செஞ்சொற் செம்மல் இரா. செல்வவடிவேல் அவர்கள்

10.09.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "திருப்பெருவடிவம்"

வழங்குபவர் :- சைவப்புலவர் எஸ்.ரி. குமரன் அவர்கள்

17.09.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு. அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

24.09.2010 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 153 ஆவது மாத வெளியீடு

## புரட்டாதி 2010

வெளியீட்டுரை :- திரு. சிவ. ஆறுமுகசாமி J.P. அவர்கள்

மதிப்பீட்டுரை :- பண்டிதர் சி. வேலாயுதம் (இளை. அதிபர்) அவர்கள்

பதிவு இல. Q.D/46/NEWS/2010

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

